# ஸாவித்ரீசரித்ரம்

TRICHINOPOLY:
THE WEDNESDAY REVIEW PRESS.

1911.

15,892:g
N11
17482

ஸ்ரீராமஜயம்.

# ஸ்ரீமத்வால்மீகிராமாயணம்.

## தமிழ்வசனம்.

திருச்சினுப்பள்ளி. எஸ். பி. ஜி. காலேஜ் லெக்சரர்,

**ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் பி. ஏ.**

அவர்களால் ஸுலபமான நடையில் மூலத்திற்கு ஸரியாய் மொழி பெயர்க்கப்பட்டது.

1. நேர்த்தியான கடிதத்தில் தெளிவான எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஏழு காண்டங்களும் ஸுமார் 3500 பக்கங்களில் **16** பாகங்களாக வெளியிடப்பட்டு, **4** வால்யூம்களாய், உயர்ந்த காலிக்கோ கில்ட்பைண்ட் செய்யப்பட்டுத் தயாராயிருக்கின்றன.

2. ஸெட்டின் விலை ரூ. **23—0—0**. (தபால் சார்ஜ் வேறு).

இரண்டு தடவைகளில் செலுத்தலாம்.



உ

ஸ்ரீராமஜயம்.

# ஸாவித்ரீசரித்ரம்.

## பதிவ்ரதாமாஹாத்ம்யம்

---

திருச்சினுப்பள்ளி
எஸ். பி. ஜி. காலேஜ், லெக்சரர்,
ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார், பி. ஏ,

அவர்களால் ஸ்ரீமன் மஹாபாரதத்திலிருந்து
மொழிபெயர்க்கப்பட்டது.

TRICHINOPOLY:
THE WEDNESDAY REVIEW PRESS.

1911.

All Rights Reserved.

விலை அணா 4.

உ

# ஸாவித்ரீசரித்ரம்.

## (பதிவ்ரதாமாஹாத்ம்யம்)

## ஸ்ரீமன்மஹாபாரதம்

## வனபர்வம்

### அத்யாயம்-294.

### ஸாவித்ரீ.

யுதிஷ்டிரர்:—“மார்க்கண்டேயமஹர்ஷே! நான் இவ்விதமான கஷ்டங்களை அனுபவிக்கிறேனென்று எனக்கு வருத்தமில்லை; என் ஸ்னேஹாதரர்கள் கஷ்டப்படுகிறார்களேயென்று எனக்கு வருத்தமில்லை; ராஜ்யத்தைக் கௌரவர்கள் அபஹரித்தார்களேயென்று எனக்கு வருத்தமில்லை. இந்த த்ரௌபதியின் நிலைமையைப் பார்க்கப் பார்க்க எனக்கு அடங்காத வருத்

தமுண்டாகிறது. கௌரவர்கள் கெட்ட எண்ணத்துடன் என்னுடன் சூதாடி எங்களை உபத்ரவித்தார்கள்; அப்பொழுது இந்த த்ரௌபதியே எங்களைக் காப்பாற்றினாள். நாங்கள் காட்டில் வஸிக்கும்பொழுது மறுபடியும் ஜயத்ரதன் இவளைப் பலாத்காரமாய்க் கொண்டுபோக யத்னஞ்செய்தான். ஸ்வாமி! எந்தப் பதிவ்ரதையாவது, எந்த மஹாபாக்யங்களை அனுபவித்தவளாவது இவளைப்போல் கஷ்டங்களை அனுபவித்ததைத் தாங்கள் பார்த்ததுண்டோ? அல்லது கேட்டதுண்டோ?

மார்க்கண்டேயர்:—"யுதிஷ்டிரமஹாராஜ! உத்தமகுலத்தில் பிறந்த ஸ்த்ரீகளுக்குள் ஸாவித்ரீயென்ற ராஜகன்யை ஸகலவிதமான பாக்யத்தையடைந்த சரித்ரத்தைச் சொல்லுகிறேன், கேள்.

மத்ரதேசத்தில் அச்வபதியென்ற ஓரரசனிருந்தான். அவன் தர்மரஹஸ்யங்களை நன்றாய் அறிந்தவன்; அவைகளைப் பூர்ணமாய் அனுஷ்டிப்பவன்; ப்ராஹ்மணர்களிடத்தில் பக்தியுள்ளவன்; விசேஷமஹிமைபொருந்தினவன்; ஸத்யந்தவறாதவன்; இந்த்ரியங்களை அடக்கினவன்; யாகங்களைச் செய்தவன்; நகரத்திலும் நாட்டிலுமுள்ள ப்ரஜைகளின் ப்ரியத்தை ஸம்பாதித்தவன; ஸகல ப்ராணிகளின் ஹிதத்தையே கோறினவன்; பொறுமையுள்ளவன். இவ்வளவு நற்குணங்களையுடையவனாயிருந்தும், அவனுக்கு வயஸ் முதிர்ந்தும், புத்ரபாக்யமில்லாததால் சொ

ல்ல முடியாத வருத்தமடைந்தான். எப்படியாவது தனக்கு ஸ்ந்ததியுண்டாகவேண்டுமென்று கடுமையான நியமத்தை அனுஷ்டித்தான். இந்த்ரியங்களை அடக்கி, ப்ரஹ்மசர்யவ்ரதத்தை அனுஷ்டித்து, ஆஹாரநியமத்தைக் கைக்கொண்டான். ப்ரதிதினமும் ஸாவித்ரீதேவதையை உத்தேசித்து, ஸோமோ வதூயு: அபவத் முதலான வேதமந்த்ரங்களை ஜபித்து, லக்ஷம் ஆஹுதி செய்து, பகலை எட்டு பாகங்களாய்ப் பிரித்து, அதில் ஆறுவது பாகத்தில் மிதமாய் ஆஹாரஞ்செய்தான். இப்படிப் பதினெட்டு வர்ஷங்கள்வரையில் இந்த நியமத்தை அனுஷ்டித்தான்.

அப்பொழுது ஸாவித்ரீதேவதை அவனுடைய தபஸால் திருப்தியடைந்து, அக்னிஹோத்ரகுண்டத்திலிருந்து திவ்யமான ரூபத்தைத் தரித்துக்கொண்டு, மஹாஸந்தோஷத்துடன் அச்வபதிக்குத் தர்சனங்கொடுத்தாள். கடுமையான வ்ரதங்களை அனுஷ்டித்த அவ்வரசனுக்கு வேண்டிய வரங்களைக் கொடுப்பதாய் நிச்சயித்து, "ராஜச்ரேஷ்ட! நீ ஞானேந்த்ரிய கர்மேந்த்ரியங்களையும் அந்தக்கரணத்தையும் ஒருமைப்படுத்தி, ப்ரஹ்மசர்யவ்ரதத்தைக் குறைவற அனுஷ்டித்துப், பரமபக்தியுடன் என்னை உபாஸித்ததால் அளவற்ற ஸந்தோஷமடைந்தேன். மத்ரதேசாதிபதே! உனக்கு வேண்டிய வரங்களைக் கேள். எந்தக் கஷ்டம் நேர்ந்தாலும் தர்மத்தைக் கைவிடக்கூடா"

தென்றாள். அதற்கு அச்வபதி, "நான் தர்மானுஷ்டானத்திற்காக ஸந்தானத்தை அடைய விரும்பி இந்த ப்ரயத்னம் செய்தேன். என் குலத்தை விருத்தி செய்யும் அநேக புத்ரர்கள் எனக்குண்டாகவேண்டும். உத்தமபுத்ரனை அடைவது பரமதர்மமென்று ப்ராஹ்மணர்கள் சொல்லுகிறார்கள்; ஆனகயால், என்னிடத்தில் தங்களுக்குக் கிருபையிருந்தால் இந்த வரத்தைக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறே" னென்று ப்ரார்த்தித்தான். அதைக் கேட்டு ஸாவித்ரீ தேவதை, "உன் அபிப்ராயம் எனக்கு நன்றாய்த் தெரியும். ப்ரஹ்மதேவரிடத்தில் இதைத் தெரிவித்தேன். ஓர் உத்தமமான கன்யை மஹாதேஜஸ்வியாய் உனக்குண்டாவாளென்று சொன்னார்; அந்த பாக்யம் உனக்கு அதிசீக்ரத்தில் கிடைக்கும்படி ஏற்பாடுசெய்திருக்கிறேன். ப்ரஹ்மதேவருடைய உத்திரவால் நான் இதை உனக்குத் தெரிவித்தேன். இப்படிச் செய்வதில் எனக்கும் மிகுந்த ஸந்தோஷமுண்டு. ஆகையால் நீ கொஞ்சங்கூட இதற்கு ஆக்ஷேபஞ்சொல்லக்கூடா" தென்றாள். அரசன் அதை ஒப்புக்கொண்டு, "தேவி! இந்தப் பாக்யம் எனக்கு வெகுசீக்ரத்தில் கிடைக்கும்படி அனுக்ரஹிக்கவேண்டு" மென்று ஸாவித்ரீயைப் பூஜித்தான். அவள் மறைந்தவுடன் தன் ராஜ்யத்திற்கு வந்து ப்ரஜைகளைத் தர்மமாய் ஆண்டுகொண்டிருந்தான்.

2-OCT 1911 MADRAS

சில காலஞ்சென்றபிறகு, ச்ரேஷ்டமான தர்மத்தை அநுஷ்டித்து வரும் ராஜமஹிஷி, அவ்வரசனுல் கர்ப்பந்தரித்தாள். மாளவராஜபுத்ரீயின் கர்ப்பத்திலுள்ள சிசு, சுக்லபக்ஷத்துச்சந்த்ரனைப்போல் வர வர விருத்தியடைந்தது; பத்தாவது மாஸத்தில் செந்தாமரைமலர்போன்ற நேத்ரங்களையுடைய ஓர் பெண் குழந்தை பிறந்தது. அச்வபதி அந்தக் குழந்தைக்கு ஜாதகர்மம் நாமகரணம் முதலிய ஸம்ஸ்காரங்களை விதிப்படி செய்தான். ஸாவித்ரீதேவதையை உபாஸித்து, ஸாவித்ரீமந்த்ரங்களால் ஆஹுதி செய்து, ஸாவித்ரீயின் அநுக்ரஹத்தால் கிடைத்தபடியால், அந்தப் பெண்ணுக்கு ப்ராஹ்மணர்களும் அச்வபதியும் ஸாவித்ரீயென்று பெயரிட்டார்கள். அவள் மஹாலக்ஷ்மீயே ரூபமெடுத்து வந்ததுபோல், நிகரற்ற அழகும் தேஜஸும் பொருந்தினவளாய் வளர்ந்து யௌவனப்பருவத்தையடைந்தாள். தங்கப் ரதிமைபோல் விளங்கும் அந்தக் கன்யையைக் கண்டு ஜனங்கள், இவள் தேவகன்யையோவென்று ப்ரமித்தார்கள். மலர்ந்த செந்தாமரையிதழ்களைப்போல் நீண்டு அகன்டு விசாலமான நேத்ரங்களுடன் தேஜஸால் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் அந்தக் கன்யையைப் பார்த்து, "இந்த மஹாகாந்திபொருந்தினவளுக்கு நாம் தகுதியல்ல" வென்று, ஒருவரும் அவளைப் பார்யையாகக் கோரவில்லை. ஒருநாள் அந்தப் பெண் உபவாஸமிருந்து, மறுநாள் மங்களஸ்நாநஞ்செய்து,

ஸாவித்ரீதேவதையைப் பூஜித்து விதிப்படி ஹோமஞ்செய்து, பர்வகாலத்தில் புண்யகதைகளை வாசிக்கும்படி ப்ராஹ்மணர்களை ப்ரார்த்தித்தாள். பிறகு தன் இஷ்டதேவதைக்குச் சூட்டின புஷ்பங்களை எடுத்துக்கொண்டு, லக்ஷ்மீயே ரூபமெடுத்து வந்தது போல் தன் பிதாவிடத்திற்குச் சென்று, அவருடைய பாதங்களில் நமஸ்கரித்துப் புஷ்பங்களைக் கொடுத்துக் கைகூப்பிப், பக்கத்தில் நின்றாள்.

தேவகன்யைகளைப்போல் ஒப்பில்லாத அழகு பொருந்தின தன் புத்ரி யௌவனத்தையடைந்தும் ஒருவரும் அவளைப் பார்யையாக விரும்பாததைக் கண்டு அச்வபதி துக்கமடைந்து, "குழந்தாய்! உனக்கு விவாஹகாலம் வந்துவிட்டது. ஆனால் என்னிடத்தில் ஒருவரும் வந்து உன்னை விவாஹஞ்செய்து கொடுக்கும்படி கேட்கவில்லை. ஆகையால் உனக்கு எவ்விதத்திலும் ஸமமான குணங்களையுடைய பர்த்தாவை நீயே தேடு. நீ யாரை விரும்புகிறாயோ அவனை என்னிடத்தில் தெரிவித்தால் நான் நன்றாய் விசாரித்து, அவனுக்கு உன்னைப் பார்யையாக்குகிறேன். உனக்கு இஷ்டமான புருஷனைக் கோறக்கடவாய். தகுந்த காலத்தில் தன் பெண்ணிற்கு விவாஹஞ்செய்துவைக்காத தகப்பனையும், ருதுகாலத்தில் பத்னியைச் சேராத பர்த்தாவையும், பிதா இறந்த பிறகு மாதாவை ரக்ஷிக்காத புத்ரனையும் லோகத்தார் நிந்திப்பார்களென்று ப்ராஹ்மணர்கள் தர்மசாஸ்த்

ரங்களைப் படிக்கும் பொழுது நீ கேட்டிருக்கலாம். என் அபிப்ராயமும் அப்படியே. உனக்குத் தகுந்த பர்த்தாவைத் தேடுவதற்குச் சீக்ரமாகப் புறப்பட்டுப் போ. தேவதைகளின் நிந்தைக்கு நான் பாத்ரமாகாதபடி செய்” யென்று, வயஸ்சென்ற மந்த்ரிகளையும் வாஹனங்களையும் பரிசாரகர்களையும் தன் புத்ரியுடன் அனுப்பினான்.

அவள் தானே தன் புருஷனைக் கோறும்படி நேர்ந்ததைப்பற்றிச் சற்று வெட்கமடைந்து, பிதாவின் கட்டளையாகையால் அதை நிறைவேற்ற நிச்சயித்து, அவரை நமஸ்காரஞ்செய்து தங்கரதத்திலேறிக்கொண்டு, வயஸ்முதிர்ந்த மந்த்ரிகளுடன் அங்கிருந்து புறப்பட்டு, ராஜர்ஷிகள் வஸிக்கும் ரம்யமான தபோவனங்களுக்குச் சென்றாள். அங்கங்கேயுள்ள பூஜிக்கத் தகுந்த பெரியோர்களை நமஸ்கரித்து, ஒவ்வொரு ஆச்ரமத்தையும் தேடிக்கொண்டு வந்தாள். இப்படி ஸகல புண்யஸ்தலங்களிலும் ப்ராஹ்மணர்களுக்கு யதேஷ்டமாய்த் தனங்களைக் கொடுத்துக்கொண்டு நாநாதேசங்களில் ஸஞ்சரித்தாள்.

## அத்யாயம்-295.

### ஸாவித்ரீ ஸத்யவானைக் கோறினது.

ஒருநாள் நாரதமஹர்ஷி அச்வபதியின் அரண்மனைக்கு வர, அவ்வரசன் அவரைப் பூஜித்துப் புண்ய கதைகளைப் பேசிக்கொண்டிருந்தான். அப்பொழுது, ஸாவித்ரீ மந்த்ரிகளுடன் புண்யதீர்த்தங்களிலும் புண்யாச்ரமங்களிலும் ஸஞ்சரித்துத், தன் பிதாவின் அரண்மனைக்கு வந்து, அவர் நாரதருடன் ஸபையில் உட்கார்ந்திருக்கக் கண்டு, இருவரையும் சிரஸால் வணங்கிப் பாதங்களில் நமஸ்கரித்தாள்.

அப்பொழுது நாரதர், "மஹாராஜ! உன் புத்ரி எங்கே போயிருந்தாள்? எங்கிருந்து வருகிறாள்? இவளுக்கு யௌவனம் வந்தபிறகும் இன்னும் ஏன் விவாஹஞ்செய்யவில்லை" யென்றார்.

அப்பொழுது அச்வபதி, "தேவர்ஷே! இந்தக் கார்யமாகவே இவளை அனுப்பியிருந்தேன். இப்பொழுதுதான் திருப்பிவருகிறாள். இவள் யாரைப் பர்த்தாவாய்க் கோறினாளென்று கேளுங்க" ளென்று, ஸாவித்ரீயைப் பார்த்துப், "பெண்ணே! நீ போய்வந்த விருத்தாந்தத்தை விஸ்தாரமாய்ச் சொல்" லென்றான். அதைக் கேட்டு அந்த ராஜகன்யை, "ஸால்

வதேசத்தில் த்யுமத்ஸேனரென்று ஓர் அரசனிருந்தார். அந்தத் தர்மாத்மாவிற்குச் சிலகாலங்கழித்து நேத்ரங்கள் உதவாமற்போயின. ஸ்தூலதிருஷ்டியை இழந்தும் ஞானதிருஷ்டியால் விளங்கும் அவருக்கு ஓர் ஆண்குழந்தையுண்டு. அவருடைய தேசத்திற்கு ஸமீபத்திலுள்ள ஓரரசன் அதற்குமுன் அவருக்குச் சத்ருவாயிருந்தான். அவருக்கு அந்தக் கஷ்டம் நேர்ந்ததைக் கண்டு படையெடுத்து வந்து, அவரை ஜயித்து ராஜ்யத்திலிருந்து துரத்தினன்.

அவர் தன் பார்யையுடனும் கைக்குழந்தையுடனும் வனத்திற்குச் சென்று, கடுமையான வ்ரதங்களை அனுஷ்டித்துத் தபஸ்செய்துகொண்டிருக்கிறார். அவர் அரசனயிருக்கும்பொழுது பிறந்த புத்ரன் தபோவனத்தில் வளர்ந்துகொண்டிருக்கிறார்; ஸத்யவானென்று அவருக்குப் பெயர்; அவரே எனக்குத் தகுந்த பர்த்தா; நான் அவரை மனஸால் கோறியிருக்கிறே'' னென்றாள்.

நாரதர்:—''ஐயோ! என்ன கஷ்டம்! ஸாவித்ரீ அக்ஞானத்தால் மஹாபாபத்தைச் செய்துவிட்டாளே! குணசாலியான ஸத்யவானைப் பர்த்தாவாய்க் கோறிவிட்டாளே! அவனுடைய பிதா ஸத்யந்தவருதவர்; மாதா ஸத்யத்தையே பேசுகிறவள்; ஆகையால் ப்ராஹ்மணர்கள் அந்தப் புத்ரனுக்கு ஸத்யவானென்று பெயரிட்டார்கள். அவன் குழந்தையாயிருக்கும்பொழுது குதிரைகளிடத்தில் வெகுப்ரிய

முள்ளவன்; மண்ணினால் குதிரைகளைச் செய்து விளையாடுவான்; சித்ரங்களில் குதிரைகளையே எழுதுவான்; ஆகையால் அவனுக்குச் சித்ராச்வனென்றும் பெயர்.''

அச்வபதி:—அந்த ராஜகுமாரன் தேஜஸ்வியா? புத்திமானா? பொறுமையுள்ளவனா? சூரனா? ஸத்யந்தவறாதவனா? பெற்றோர்களிடத்தில் ப்ரியமுள்ளவனா?

நாரதர்:—அவன் தேஜஸில் ஸூர்யனைப்போன்றவன்; புத்தியில் பிருஹஸ்பதி; வீர்யத்தில் மஹேந்த்ரன்; பொறுமையில் பூமிதேவி.

அச்வபதி:—அவன் யதேஷ்டமாய் யாசகர்களுக்குக் கொடுப்பவனா? ப்ராஹ்மணர்களிடத்தில் பக்தியுள்ளவனா? அழகுள்ளவனாயிருந்தும் பெருந்தன்மையான ஸ்வபாவமுள்ளவனா? அல்லது பார்ப்பதற்கு மாத்ரம் ப்ரியமானவனா?

நாரதர்:—தானங்கொடுப்பதில் ஸங்கிருதியின் குமாரனான ரந்திதேவனைப்போன்றவன்; உசீனரனுடைய புத்ரனான சிபிசக்ரவர்த்தியைப்போல் ஸத்யந்தவறாதவன்; ப்ராஹ்மணர்களிடத்தில் பக்தியுள்ளவன்; யயாதியைப்போல் பெருந்தன்மையுள்ளவன்; சந்த்ரனைப்போல் ப்ரியமான பார்வையுடையவன்; அச்வினீதேவர்களைப்போல் அழகுபொருந்தினவன். அவன் மஹாபலவான், தானசீலன், தேஜஸ்வி, புத்திமான், பொறுமையுள்ளவன், அடக்கமுள்ளவன், மிருதுவாய்ப் பேசுகிறவன், சூரன், ஸத்யந்தவறாத

வன், இந்தரியங்களை அடக்கினவன், உத்தமமித்ரர்களையுடையவன், அஸூயையில்லாதவன், அதர்மத்தில் வெட்கமுள்ளவன், தேஹகாந்தியுள்ளவன்; கபடமில்லாமை உறுதி முதலிய உத்தமகுணங்கள் அவனிடத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருக்கின்றனவென்று தபஸில் முதிர்ந்தவர்களும் ஆசாரத்தில் முதிர்ந்தவர்களும் அடிக்கடி சொல்லக்கேட்டிருக்கிறேன்.

அச்வபதி:—அவன் ஸகல குணங்களும் பொருந்தினவனென்று சொல்லுகிறீர்கள். அவனிடத்தில் தோஷங்களிருந்தால் அவைகளையும் சொல்லவேண்டும்.

நாரதர்:—அவனிடத்திலுள்ள தோஷம் ஒன்றே; அது ஸகல குணங்களையும் ஆக்ரமிக்கிறது; எந்த ப்ரயத்னதாலும் அதை விலக்கமுடியாது. இன்று முதல் ஒரு வர்ஷத்திற்குள் அவன் உயிரையிழப்பான். இதைத்தவிர ஸத்யவானுக்கு வேறு தோஷமில்லை

அச்வபதி:—ஸாவித்ரீ! இங்கே வா, வேறு பர்த்தாவைத் தேடு. ஸத்யவானிடத்திலிருக்கும் ஒரு தோஷம் ஸகல குணங்களையும் ஆக்ரமிக்கிறது. தேவர்களால் பூஜிக்கப்படும் நாரதபகவான் சொல்லுகிறபடி அந்த அல்பாயுஸுள்ளவன் இன்றுமுதல் ஒரு வர்ஷமானவுடன் மரணமடைவான்.

ஸாவித்ரீ:—கல்லையும் கட்டையையும் பிளந்து விழுந்த துண்டு விழுந்ததே. சூதாட்டத்தில் குலுக்கி விழுந்த காய்கள் விழுந்ததே. கன்யையை விவாஹஞ்

செய்து கொடுத்தால் கொடுத்ததே. ஒரு பதார்த்தத்தைக் கொடுக்கிறேனென்று சொன்னால் சொன்னதே. இம்மூன்றும் ஒரே தடவையேயொழிய செய்ததை மாற்றமுடியாது. அவர் தீர்க்காயுஸுடையவரானாலும் அல்பாயுஸுடையவரானாலும், குணசாலியானாலும் குணஹீனரானாலும், வேறொருவரை வரிக்கமாட்டேன். முதலில் மனஸால் நிச்சயஞ்செய்து, பிறகு வாக்கினால் அதைச்சொல்லிப், பிறகு அதைச்செய்வது வழக்கம். மனஸால் நிச்சயித்ததே இதற்கு ப்ரமாணம்.

நாரதர்:—உன் புத்ரியான ஸாவித்ரீயின் புத்தி வெகுஸ்திரமானது. இந்தத் தர்மத்திலிருந்து இவளை ஒருக்காலும் திருப்பமுடியாது. ஸத்யவானிடத்திலுள்ள நற்குணங்கள் வேறொருவரிடத்திலில்லை. ஆகையால் அவனுக்கு உன் புத்ரியை விவாஹஞ் செய்துகொடுப்பதே நலம்.

அச்வபதி:—ஸாவித்ரீயின் வார்த்தை ஸத்யமாயும் அசைக்கமுடியாததாயுமிருக்கிறது. அப்படியே செய்கிறேன். தாங்கள் எனக்குப் பரமகுருவல்லவா?

நாரதர்:—உன் புத்ரியான ஸாவித்ரீயின் விவாஹம் விக்னமில்லாமல் நிறைவேறக்கடவது. நான் போய்வருகிறேன். உங்களெல்லோருக்கும் மங்களமுண்டாகட்டு'' மென்று, நாரதர் ஆகாசமார்க்கமாய்த் தேவலோகஞ்சென்றார். அச்வபதி தன் புத்ரியின் விவாஹத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான்.

## அத்யாயம்-296.

### ஸாவித்ரீயின் விவாஹம்.

தன் புத்ரியை விவாஹஞ்செய்துகொடுப்பதைப் பற்றி நாரதர் சொன்ன வார்த்தைகளை ஆலோசித்து, த்யுமத்ஸேனன் அதற்கு வேண்டிய ஸகல ஸாமக்ரிகளையும் தயார்செய்து, வயஸ்சென்ற ப்ராஹ்மணர்களையும் ரித்விக்குகளையும் புரோஹிதர்களையும் ஸபையோர்களையும் அழைத்துக்கொண்டு, சுபதினத்தில் தன் ராஜதானியைவிட்டுப் புறப்பட்டு, த்யுமத்ஸேனன் வஸிக்கும் பரிசுத்தமான அரண்யத்திற்குச் சென்றான்.

அங்கே வாஹனங்களை நிறுத்தி, ப்ராஹ்மணர்களுடன் அந்த ராஜர்ஷியின் ஆச்ரமத்திற்குக் கால்நடையாய்ச் சென்றான். அங்கே ஒரு ஆச்சாமரத்தடியில் போடப்பட்ட தர்ப்பாஸனத்தில், த்யுமத்ஸேனனென்ற மஹாத்மா ஸ்தூலதிருஷ்டியற்றவராய் உட்கார்ந்திருக்கக் கண்டான். அச்வபதி அவரை விதிப்படி பூஜித்துத், தான் இன்னாரென்பதைத் தெரிவித்தான். அந்த ராஜர்ஷி அச்வபதிக்கு அர்க்யபாத்ய ஆசமனீய ஆஸனங்களைக் கொடுத்து மதுபர்க்கத்தால் உபசரித்துத், "தாங்கள் வந்த கார்யமென்ன" வென்று கேட்டார்.

அச்வபதி அதுவரையில் நடந்த விருத்தாந்தத்தையும் ஸாவித்ரீயின் நிச்சயத்தையும் தன் அபிப்ராயத்தையும் விஸ்தாரமாய் எடுத்துச் சொல்லி, "ராஜர்ஷே! மஹாபாக்யசாலியான ஸாவித்ரீயென்ற என் புத்ரி இவளே. ஸகல தர்மங்களையுமறிந்த தாங்கள் குலாசாரப்படி இவளைத் தங்களுடைய நாட்டுப்பெண்ணாக அங்கீகரிக்கவேண்டு" மென்று ப்ரார்த்தித்தார்.

த்யுமத்ஸேனன்:—"ராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்டோம். வனத்தில் வஸித்துக்கொண்டு தபஸ்விகளின் நியமங்களை அனுஷ்டித்துக்கொண்டிருக்கிறோம். செல்வமாய்ப் பிறந்து வளர்ந்த தங்களுடைய புத்ரி இந்த ஆச்ரமத்தில் வனவாஸகஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு எப்படியிருப்பாள்?

அச்வபதி:—ஸுகமும் துக்கமும் நிலையற்றவையென்பது எனக்கும் என் புத்ரிக்கும் நன்றாய்த் தெரியும். என்னைப்பார்த்து இப்படிச் சொல்லக்கூடாது. இப்படிச் செய்வதாய் நிச்சயித்துக்கொண்டு இங்கே வந்திருக்கிறேன். மித்ரபாவத்தால் தங்களை ஆச்ரயித்த என் ஆசையை வீணாக்கக்கூடாது. இந்தக் கார்யத்தை எப்படியாவது முடிக்கவேண்டுமென்று விசேஷ ஆவலுடன் தங்களிடத்தில் வந்திருக்கிறேன். என்னை மறுத்துச்சொல்லக்கூடாது. நாமிருவரும் எல்லா விதத்திலும் ஸமமான ஸம்பந்திகள். என் புத்ரியை ஸத்யவானுக்குப் பார்யையாய்த் தங்களுக்கு நாட்டுப்பெண்ணாய் அங்கீகரிக்க ப்ரார்த்திக்கிறேன்.

த்யுமத்ஸேனன்:—தங்களுடன் ஸம்பந்தஞ்செய்யவேண்டுமென்று எனக்கு முன்னமே விருப்பமுண்டு. ஆனால் நான் ராஜ்யத்தை இழந்திருப்பதால் சற்றுத் தயங்கினேன். ஆதியில் நான் கோறின விஷயமே இன்று முடியுமென்றெண்ணுகிறேன். தாங்கள் எனக்குப் பூஜ்யரான அதிதியல்லவா" வென்றார்.

பிறகு அந்த ஆச்ரமங்களில் வஸிக்கும் ப்ராஹ்மணர்களை அழைப்பித்து, ஸத்யவானுக்கும் ஸாவித்ரீக்கும் விவாஹமஹோத்ஸவத்தை விதிப்படி நடத்தினார்கள். அச்வபதி தன் புத்ரியைத் தகுந்த வரிசைகளுடன் ஸத்யவானுக்குப் பார்யையாகக்கொடுத்து, மஹாஸந்தோஷமடைந்தவனாய்த் தன் நகரத்திற்குத் திரும்பி வந்தான். ஸமஸ்த நற்குணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஸாவித்ரீயைப் பார்யையாயடைந்து ஸத்யவான் அளவற்ற ஸந்தோஷப்பட்டான்; தான் கோறின புருஷனைப் பர்த்தாவாயடைந்ததைப்பற்றி அந்த ராஜகன்யைக்கும் எல்லையற்ற ஆனந்தமுண்டாயிற்று. தன் பிதா அங்கிருந்து சென்றபிறகு, அவள் தன் வஸ்த்ராபரணங்களைக் கழற்றிவிட்டுக் காஷாயத்தையும் மரவுரியையும் உடுத்துக்கொண்டாள். நல்ல குணங்களாலும் சுச்ரூஷையாலும் வணக்கத்தாலும் அடக்கத்தாலும் அவரவர்களுடைய அபிப்ராயத்தையறிந்து நடப்பதாலும் எல்லோரையும் திருப்திசெய்தாள். மாமியாருக்கு ஸ்நாநஞ்செய்துவைப்பது, ச்ரமந்தீரும்படி அங்கங்களைப் பிடிப்பது, விசிறுவது, துடைப்

பது, போர்த்திவிடுவது முதலிய உபசாரங்களால் அவளை ஸந்தோஷப்படுத்தினாள். மாமனார் செய்யும் தேவகார்யங்களுக்கு வேண்டிய ஸாமக்ரிகளைச் சேர்த்துவைத்துத் தகுந்த ஸமயத்தில் எடுத்துக்கொடுப்பது, அடக்கத்துடன் பேசுவது, முதலிய கார்யங்களால் அவரை ஸந்தோஷப்படுத்தினாள். பர்த்தாவிடத்தில் ப்ரியமாய்ப்பேசுவதாலும் தனியேயிருக்கும் பொழுது ஸகல உபசாரங்களைச் செய்வதாலும் ஸாமர்த்யத்தாலும் அடக்கத்தாலும் அவருடைய மனஸைக் கவர்ந்தாள். இப்படி அவர்கள் அந்த ஆச்ரமத்தில் வஸித்துக்கொண்டு புண்யமான தபஸைச் செய்து காலங்கழித்துவந்தார்கள். ஆனால் நாரதர் சொன்ன வார்த்தையை நினைத்து நினைத்து ஸாவித்ரீ இரவும் பகலும் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள்.

# அத்யாயம்-297.

## ஸாவித்ரீ ஸத்யவானுடன் வனத்திற்குச் சென்றது.

இப்படிச் சிலகாலம் சென்றபிறகு, ஸத்யவான் மரணமடையவேண்டிய ஸமயம் வந்தது. ஸாவித்ரீ நாரதருடைய வார்த்தைகளை மறக்காமல், ஒவ்வொரு நாளையும் ஜாக்ரதையாய் எண்ணிக்கொண்டிருந்தாள். "இன்றைக்கு நாலாவது தினத்தில் என் பர்த்தா மரணமடைவாரெ" ன்று நிச்சயித்து, மூன்று தினங்கள் வரையில் இரவும் பகலும் ஓர் வ்ரதத்தை அனுஷ்டித்து வந்தாள். த்ரயோதசிமுதல் உபவாஸமிருந்து ப்ரதமையில் பாரணைசெய்தாள்; இதனால் தன் பர்த்தாவின் ஆயுஸ் விருத்தியாகவேண்டுமென்பதே அவளுடைய கருத்து. த்யுமத்ஸேனன் அதைக் கேள்விப்பட்டு மிகுந்த துக்கமடைந்து, ஸாவித்ரீயைப் பலவிதமாய் ஸமாதானஞ்செய்து, "ராஜபுத்ரீ! நீ ஆரம்பத்திலேயே இவ்வளவு தீவ்ரமான வ்ரதத்தை அனுஷ்டிக்கலாமா? மூன்று தினங்கள்வரையில் உபவாஸமிருப்பது மஹாகஷ்டமல்லவா" வென்றார்.

ஸாவித்ரீ:—ஸ்வாமி! தாங்கள் இதைப்பற்றி வருத்தப்படக்கூடாது. இந்த வ்ரதத்தை என்னால் முடிக்

கக்கூடும். இதற்கு முயற்சியே காரணம்; இது முயற்சியால் ஸாதிக்கத்தகுந்தது.

த்யுமத்ஸேனன்:—ச்ரேஷ்டமான வ்ரதத்தை ஆரம்பித்தபிறகு விட்டுவிடென்று நான் சொல்லத் துணியமாட்டேன். இதை எப்படியாவது முடிப்பதே நலமென்று என்னைப்போன்றவர்கள் சொல்வது தகு" மென்றார்.

பிறகு ஸாவித்ரீ கட்டையைப்போல் அசைவற்று, ஸகல இந்த்ரியங்களையுமடக்கித், தான் அநுஷ்டிக்கும் வ்ரதத்திற்குப் பலத்தைக் கொடுக்கும் தேவதையிடத்தில் தன் மனஸை நிறுத்தினாள். தன் பர்த்தா மரணமடைவதற்கு முதல் நாள் ராத்ரிமுழுவதும் துக்கஸமுத்ரத்தில் தத்தளித்துக்கொண்டு காலத்தைக் கழித்தாள். மறுநாள், "என் பர்த்தா மரணமடையவேண்டிய தினம் இன்றுதா" னென்று, ஜ்வலிக்கும் அக்னியில் ஹோமஞ்செய்து, ஸூர்யன் ஒரு நுகத்தடியளவு ஆகாசவீதியில் வந்தவுடன், முன்பகலில் செய்யவேண்டிய க்ரியைகளைச் செய்து முடித்து, ஸாவித்ரீ வ்ரதத்தைப் பூர்த்திசெய்தாள். பிறகு மஹாகீர்த்திபொருந்திய அந்த ராஜகுமாரி, ஸ்நாநஞ்செய்து சுத்தையாய், வயஸ்சென்ற ஸகல ப்ராஹ்மணர்களையும் தன் மாமனாரையும் மாமியாரையும் நமஸ்காரஞ்செய்து, கைகூப்பி வணக்கத்துடன் நின்றாள். அந்தத் தபோவனத்தில் வஸிக்கும் தபஸ்விகளெல்லோரும், "நீ தீர்க்கஸுமங்கலியாயிருக்கக்

கடவா" யென்று சுபமான ஆசீர்வாதங்களைச் செய் தார்கள். அப்படியே ஆகட்டுமென்று, த்யானத்தில் ஆழ்ந்த சித்தத்துடன், ஸாவித்ரீ அந்த வார்த்தைகளை மனஸால் அங்கீகரித்தாள். நாரதர் சொன்னபடி அந்த மரணகாலத்தையும் அந்த முஹூர்த்தத்தை யும் எதிர்பார்த்துக்கொண்டு மிகவும் துக்கித்தாள்.

பிறகு அவள் தனியாயிருக்கும்பொழுது அவளு டைய மாமனுருப் மாமியாரும் வெகுப்ரீதியுடன் அவளைப் பார்த்து, "விதிப்படி வ்ரதத்தை அனுஷ்டித் தாய். ஆஹாரஞ்செய்யவேண்டிய காலம் ஸமீபித்து விட்டது. ஆகையால் இனி செய்யவேண்டியதைச் செய்" யென்றார்கள்.

ஸாவித்ரீ:—ஸூர்யன் அஸ்தமித்தவுடன் என் எண்ணங்கள் நிறைவேறினபிறகு போஜனஞ்செய்ய வேண்டுமென்று முன்பே ஸங்கல்பஞ்செய்துகொண் டிருக்கிறே" னென்றாள். இப்படி ஸாவித்ரீ போ ஜனஞ்செய்வதைப்பற்றி அவர்கள் பேசிக்கொண்டி ருக்கையில், ஸத்யவான் தோளில் கோடாலியை மாட் டிக்கொண்டு வனத்திற்குப் போகப் புறப்பட்டான்.

ஸாவித்ரீ:—ஸ்வாமி! தாங்கள் ஒண்டியாய்ப் போ கக்கூடாது; நானும் வருகிறேன். தங்களை விட்டுப் பிரிந்திருக்க இஷ்டமில்லை.

ஸத்யவான்:—நீ இதுவரையில் வனத்தில் ஸஞ்ச ரித்தவளல்ல. போகும் வழியோ மிகவும் கஷ்டமான து. வ்ரதங்களாலும் உபவாஸங்களாலும் மிகவும்

மெலிந்து ச்ரமமடைந்திருக்கிறாய். உன்னால் நடந்து வர முடியாது.

ஸா:—உபவாஸமிருந்ததால் எனக்குக் களைப்புமில்லை, ச்ரமமுமில்லை. தங்களுடன் வருவதாய் நிச்சயித்திருக்கும் என்னைத் தடுக்கக்கூடாதென்று ப்ரார்த்திக்கிறேன்.

ஸ:—"அப்படியானால் உன் இஷ்டப்படி செய்கிறேன். என் பெற்றோர்களிடத்தில் உத்திரவுபெற்றுக்கொள். அவர்கள் என்னிடத்தில் குற்றஞ்சாட்டாமலிருக்கவேண்டுமெ" ன்றான்.

உடனே ஸாவித்ரீ அவர்களிடத்தில் சென்று நமஸ்கரித்து, மஹாவ்ரதத்தை அனுஷ்டித்ததாலுண்டான காந்தியால் ஜ்வலித்துக்கொண்டு, "என் பர்த்தா பழங்களைக் கொண்டுவருவதற்காக வனத்திற்குச் செல்லுகிறார். தாங்கள் உத்திரவுகொடுத்தால் அவருடன் போக விரும்புகிறேன். அவரை விட்டுப் பிரிந்திருக்கமாட்டேன். பெரியோர்களுடைய கார்யமாயும் அக்னிஹோத்ரத்திற்கு வேண்டிய ஸாமக்ரிகளைக் கொண்டுவருவதற்கும் அவர் வனத்திற்குப் போகிறபடியால் அவரைத் தடுக்கக்கூடாது. வேறுவிதமாயிருந்தால் தடுத்துவிடுவேன். அவர் போகப் புறப்பட்டுவிட்டார். நான் இந்த ஆச்ரமத்தைவிட்டு வெளியில் போய் ஏறக்குறைய ஒரு வர்ஷமாகிறது. விசித்ரமான புஷ்பங்களால் நிறைந்து விளங்கும் வனத்தைப் பார்க்க மிகவும் ஆவல்கொண்டிருக்கிறேனெ" ன்றாள்.

த்யுமத்ஸேனன்:—"ஸாவித்ரீ! உன் பிதா உன்னை எங்களுக்கு நாட்டுப்பெண்ணாய்க் கொடுத்தது முதல் இதுவரையில் நீ என்னிடத்தில் யாதொன்றையும் ப்ரார்த்தித்ததாக எனக்கு ஞாபகமில்லை. ஆகையால் உன்னிஷ்டப்படி போய்வா. ஸத்யவானுடன் நீ போகும் வழியில் வெகுஜாக்ரதையாயிருக்கவேண்டு" மென்றார்.

பதிவ்ரதாசிரோமணியென்று அபாரகீர்த்தியை அடையப்போகும் அந்த அச்வபதியின் புத்ரி, அவர்களிடத்தில் உத்திரவுபெற்றுக்கொண்டு ஸத்யவானுடன் வனத்திற்குச் சென்றாள். அவரை ஸந்தோஷப்படுத்துவதற்காக வெளிக்கு ஸந்தோஷமாய்ச் சிரித்துக்கொண்டிருந்தாள்; மனவிலோ தீராக்கவலை குடிகொண்டிருந்தது. விசித்ரமாயும் ரமணீயமாயுமிருக்கும் வனங்களையும் அவைகளில் மயில்கள் கூட்டங்கூட்டமாய் விளையாடுவதையும் கண்டாள். "இந்தப் புண்யநதிகளையும் புஷ்பங்களால் விளங்கும் மஹாவிருக்ஷங்களையும் பார்" ரென்று, ஸத்யவான் அவைகளை ஸாவித்ரீக்கு மதுரமாய் வர்ணித்துக்கொண்டு சென்றான். அவன் யாதொரு கவலையுமில்லாமல் ஸந்தோஷமாயிருப்பதைப் பார்த்து, ஸாவித்ரீ நாரதருடைய வார்த்தையை நினைத்து நினைத்து, "இவர் மரணமடையப் போகிறாரென்பதில் ஸந்தேஹமில்லையெ" ன்றெண்ணினாள். ஸத்யவானுடைய வார்த்தைகளுக்குத் தகுந்தபடி பதில் சொல்லிக்கொண்டு,

அதே ஸமயத்தில் தன் பர்த்தா மரணமடையும் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு, இப்படித் தன் மனஸை இரண்டு விதமாய்ச் செய்துகொண்டு, மெள்ள மெள்ள ஸத்யவானைப் பின்தொடர்ந்தாள்.

## அத்யாயம்-298

### ஸாவித்ரீ மிருத்யுவை ஜயித்தது

பிறகு ஸத்யவான் நேர்த்தியான பழங்களைப் பறித்துக் கூடையை நிரப்பிக், கோடாலியால் உலர்ந்த கட்டைகளை வெட்டிப் பிளந்தான். தேஹத்தில் வியர்வை சொரிந்தது, ஆயாஸத்தால் தலைவலியுண்டாயிற்று. மிகவும் களைத்து, ஸாவித்ரீயைப் பார்த்துப், "பெண்ணே! கட்டைகளை உடைப்பதாலுண்டான ச்ரமத்தால் தலை வலிக்கிறது. அங்கங்கள் களைப்படைகின்றன. ஹிருதயத்தில் ஏதோ ஒரு வருத்தமுண்டாகிறது. எனக்குத் தேஹஸ்வாதீனமில்லை. ஏதோ அஸௌக்யம் நேர்ந்திருக்கிறது. அடக்கமாயும் மிருதுவாயும் பேசும் பெண்ணே! என் தலையில் சூலங்களால் குத்திப் பிளப்பதுபோலிருக்கிறது. ஸகல திக்குகளும் சுற்றுவதுபோல் தோன்றுகிறது. என் மனஸ் சக்ரத்தில் வைக்கப்பட்டது போல் வேகமாய்ச் சுழல்கிறது; நிற்கமுடியவில்லை சற்றுத் தூங்க விரும்புகிறே" னென்றான். ஸாவித்ரீ தன் பர்த்தாவின் ஸமீபத்தில் சென்று, அவரைக் கட்டிப்பிடித்து, அவருடைய தலையைத் தன் மடியில் வைத்துக்கொண்டு, தரையில் உட்கார்ந்தாள். நாரதருடைய வார்த்தையை ஆலோசித்து, அந்த மஹாத

பஸ்வினீ தன் பர்த்தா மரணமடையவேண்டிய நாளு ம் வேளையும் முஹூர்த்தமும் நிமிஷமும் வந்துவிட் டதென்று நினைத்து, "ஐயோ! என்ன கஷ்டம்! நார தர் குறிப்பிட்ட காலம் வந்துவிட்டதே" யென்று ஏக்கம்பிடித்திருந்தாள்.

அப்பொழுது ஓர் பயங்கரமான புருஷன் ஸத்ய வானுக்கு ஸமீபத்தில் தோன்றி, அவனையே பார்த்து க்கொண்டிருந்தான். அவன் கிரீடகுண்டலங்க ளால் அலங்கரிக்கப்பட்டிருந்தான்; சிவப்புவஸ்த்ரத் தை உடுத்திருந்தான்; கறுப்பும் வெளுப்பும் கலந்த தேஹத்துடனும், நெருப்புப்பொறிபோல் சிவந்த கண்களுடனும், ஸூர்யனைப்போல் தேஜஸுடனும், உத்தமமான சரீரத்துடனும் விளங்கினான்; அவனு டைய கையில் காலபாசம் ஜ்வலித்துக்கொண்டிருந் தது. ஸாவித்ரீ அவனைக் கண்டு ஸத்யவானுடைய தலையை மிருதுவாய் பூமியில் வைத்துப், பரபரப்புட ன் எழுந்து, கைகூப்பி நமஸ்கரித்து, ஹிருதயம் பய த்தால் நடுங்கத், துக்கத்தால் வார்த்தை குளறப், "பகவன்! தங்களுடைய தேஹகாந்தியால் தாங்கள் மனுஷ்யனல்லவென்றும் தேவதையென்றும் அறிந் தேன். தாங்கள் யார்? தங்களுக்கென்ன ஆக வேண்டும். தேவச்ரேஷ்ட! தாராளமாய்ச் சொல்ல வேண்டு" மென்றாள்,

யமன்:—ஸாவித்ரீ! நீ மஹாபதிவ்ரதை; தபோ பலமுடையவள்; ஆகையால் நான் உன்னுடன் பேச

லாம். என்னை யமனென்று சொல்லுவார்கள். உன் பர்த்தாவான இந்த ஸத்யவானுடைய ஆயுஷ்காலம் முடிந்துவிட்டது. அவனைக் கட்டிக் கொண்டுபோக வந்திருக்கிறேன். நான் வந்த கார்யம் இதுதான்.

ஸா:—"பகவன்! மனுஷ்யர்களுக்கு ஆயுஸ் முடிந்தவுடன் தங்களுடைய தூதர்கள் வந்து அவர்களைக் கொண்டுபோகிறார்களென்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு ப்ரபுவான தாங்களோ இப்பொழுது வந்த காரணமென்ன?

ய:—பெண்ணே! இவன் மிகவும் அழகுபொருந்தினவன், தர்மாத்மா, உத்தமகுணங்களுக்கிருப்பிடம்; என் கிங்கரர்களுக்கு இவனைக் கொண்டுபோக யோக்யதையில்லை. ஆகையால் நானே வந்தேனெ"ன்றார்.

பிறகு அவர் ஸத்யவானுடைய தேஹத்திலிருந்து கட்டைவிரல் ப்ரமாணமுள்ள புருஷனை வெளியில் பலத்துடன் பிடித்திழுத்துப், பாசத்தால் கட்டித், தன் வசப்படுத்தினார்.

உடனே ப்ராணவாயுக்கள் வெளிப்பட்டன; ச்வாஸம் ஓய்ந்தது; காந்தி குறைந்தது; அவயவங்கள் அசைவற்றன; பார்ப்பதற்கு வெறுப்பாயிருந்தது; பிறகு, யமன் அந்த ஜீவனைக் கட்டியெடுத்துக் கொண்டு தெற்கே சென்றார். ஸாவித்ரீ மஹாபதிவ்ரதை; மஹாபாக்யசாலி; நியமங்களையும் வ்ரதங்களையும் பூர்ணமாய் அனுஷ்டித்தவள்; நிகரற்ற அழகு



97482

பொருந்தினவள்; ஆகையால் தன் பர்த்தாவின் சரீரத்தை ஜாக்ரதையாய் ஓரிடத்தில் ரக்ஷித்துவைத்துத், துக்கத்தால் மனம் வாடி, அவரைக் கொண்டு போகும் யமனைப் பின்தொடர்ந்து சென்றாள்.

ய:—ஸாவித்ரீ! திரும்பிப்போ. உன் பர்த்தாவிற்குச் செய்யவேண்டிய உத்தரக்ரியைகளை விதிப்படி நடத்து. எவ்வளவு தூரம் அவனைப் பின்தொடரவேண்டுமோ அவ்வளவு தூரம் வந்துவிட்டாய். நீ அவனுக்குச் செய்யவேண்டிய கடமை பாக்கியில்லை.

ஸா:—என் பர்த்தா எங்கே போகிறாரோ, அல்லது கொண்டுபோகப்படுகிறாரோ நானும் அங்கே போகவேண்டியது; இது அனாதியாய் அனுஷ்டிக்கப்படும் தர்மம். என் தபோமஹிமையாலும், பெரியோர்களிடத்திலுள்ள பக்தியாலும், பர்த்தாவிடத்தில் நான் வைத்திருக்கும் ப்ரேமையாலும், நான் அனுஷ்டித்த வ்ரதங்களாலும், தங்களுடைய கிருபையாலும், நான் தடையில்லாமல் எங்கும் செல்லலாம். ஒருவருடன் ஏழடி நடந்தால் ஸ்நேஹமுண்டாவதற்கு அதே போதுமென்று, தத்வத்தையறிந்த வித்வான்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் தங்களுடன் இவ்வளவு தூரம் வந்ததாலுண்டான ஸ்நேஹத்தை முன்னிட்டு ஒரு விக்ஞாபனம் செய்துகொள்ளுகிறேன். அதை அங்கீகரிக்கவேண்டும். இந்த்ரியங்களை ஜயிக்காதவர்கள் வனத்தில் வஸித்துக்கொண்டு, யாகயக்ஞங்கள் முதலிய தர்மங்களை அனுஷ்டிக்க

முடியாது. இந்த்ரியங்களை ஜயித்தவர்கள் வனத்திலோ க்ராமத்திலோ ஸ்த்ரீகளுடன் செய்யத் தகுந்த யக்ஞம் முதலான தர்மங்களை அனுஷ்டிக்கிறார்கள்; குருகுலவாஸம் ப்ரஹ்மசர்யம் ஸந்யாஸம் முதலியவைகளையும் ஸாதிக்கிறார்கள். தர்மமே ஆத்ம ஞானத்திற்குக் காரணமென்று சொல்லுகிறபடியால், ஸாதுக்கள் தர்மத்தையே ப்ரதானமாய் எண்ணுகிறார்கள். ப்ரஹ்மசர்ய கிருஹஸ்த வானப்ரஸ்த ஸந்யாஸமென்ற நான்கு ஆச்ரமங்களுக்குள், பெருமை டம்பம் முதலிய கபடமில்லாமல் நிஜமான ச்ரத்தையுடன் ஏதாவதொன்றை அனுஷ்டித்தால், அது அந்த ஆத்மஞானத்தையே கொடுக்கும். ஆகையால் எனக்குக் குருகுலவாஸமும் நைஷ்டிக ப்ரஹ்மசர்யமும் வேண்டாம்; ஸந்யாஸமும் வேண்டாம். கிருஹஸ்தாச்ரமத்தையே கைக்கொண்டிருக்கிறேன்; அதின் வழியாய் ஆத்மஞானத்தையும் உத்தமகதியையும் அடைய உத்தேசித்திருக்கிறேன். அதற்கு நானும் என் பர்த்தாவும் சேர்ந்து நடத்தவேண்டிய யாகயக்ஞம் ஔபாஸனம் வைச்வதேவம் அதிதிபூஜை புத்ரோத்பத்தி முதலிய க்ரியைகளே ஸாதனங்கள். என் பர்த்தாவின் ஜீவனைத் தாங்கள் அபஹரித்தால் அவைகளை நடத்தமுடியாது. ஸாதுக்கள் ப்ரதானமாய்க் கொண்டாடும் கிருஹஸ்ததர்மத்தைத் தாங்கள் கெடுக்கலாமா?

ய:—நீ சொல்லும் வார்த்தைகள் ஸ்வரம் அக்ஷ

ரம் உயிர் மெய்யெழுத்துக்குள் யுக்தி முதலியவைக ளில் யாதொரு தோஷமுமில்லாமல் வெகுமதுரமா யிருக்கின்றன. அவைகளைக் கேட்டு எனக்கு மிகுந்த ஸந்தோஷமுண்டாயிருக்கிறது. நீ திரும்பிப்போ. ஸத் யவானுடைய உயிரைத்தவிர வேறு எந்த வரத்தை நீ கேட்டாலும் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். எவ்விதத்திலும் தோஷமற்ற உன் ப்ரார்த்தனையை நிறைவேற்றுவது என் கடமையல்லவா?

ஸா:—ஸ்வாமி! என் மாமனார் ராஜ்யத்திலிருந்து சத்ருவால் துரத்தப்பட்டுத் தபோவனத்தில் வஸி த்துக்கொண்டிருக்கிறார். நேத்ரங்கள் அவருக்கு ஸ்வாதீனமில்லை; அவருக்கு எப்பொழுதும்போல் பார்க்கும் சக்தியும் பலமும் வேண்டும். அக்னி யைப் போலும் ஸூர்யனைப்போலும் தேஜஸ்வியாயி ருக்கவேண்டும். தங்களுக்கு என்னிடத்தில் கிருபையி ருந்தால் இந்த வரத்தைக் கொடுக்கும்படி ப்ரார்த்திக் கிறேன்.

ய:—அப்படியே கொடுத்தேன். நீ விரும்புகிற படியே நடக்கட்டும். வெகுதூரம் வந்ததால் நீ களைத்திருக்கிறாயென்றெண்ணுகிறேன். திரும்பிப் போ. நீ ச்ரமப்படுவதில் எனக்கிஷ்டமில்லை.

ஸா:—என் பர்த்தாவைத்தவிர எனக்கு வேறு கதியுண்டோ? அவருடைய ஸமீபத்திலிருக்கும்வரை யில் ச்ரமமேது? அவரைத் தாங்கள் எங்கே கொண் டுபோகிறீர்களோ அங்கே நானும் வரவேண்டியது.

தேவச்ரேஷ்ட! இன்னுமொரு விக்ஞாபனஞ்செய்து கொள்ளுகிறேன். தயவுசெய்து அங்கீகரிக்கவேண்டும். ஸாதுக்களை ஒரு தடவையாவது கண்டு பேசுவது உத்தமலாபமென்று எல்லோரும் விரும்புகிறார்கள். அந்த ஸாதுக்களுடன் ஸ்நேஹஞ்செய்வது அதைக்காட்டிலும் உத்தமம். ஸாதுக்களுடைய சேர்க்கை நமக்கு உத்தமபலத்தைக் கொடுக்கத் தவறாது. ஆகையால் ஸாதுக்களுடைய கோஷ்டியில் நாம் எப்பொழுதும் வஸிக்கவேண்டும்.

ய:—நீ சொல்லும் வார்த்தைகள் மனஸுக்கு அனுகூலமாயும் புத்திமான்களுடைய புத்தியையும் விருத்திசெய்வதாயும் பரமஹிதத்தைக் கொடுக்கக்கூடியதாயுமிருக்கின்றன. ஆகையால் ஸத்யவானுடைய உயிரைத்தவிர இன்னுமொருவரத்தைக் கேள்.

ஸா:—மஹாபுத்திமானான என் மாமனார் இழந்த ராஜ்யம் அவருக்கு மறுபடியும் கிடைக்கவேண்டும். தன் வர்ணாச்ரமதர்மத்திலிருந்து அவர் ஒரு நாளும் நழுவக்கூடாது. நான் கேட்கும் இரண்டாவது வரம் இதுதான்.

ய:—உன் மாமனார் தன் ராஜ்யத்தை அதிசீக்ரத்தில் அடைவார்; தன் வர்ணாச்ரமதர்மத்திலிருந்து நழுவமாட்டார். நீ கேட்ட வரங்களைக் கொடுத்தேன்; உன் மனோரதங்களை நிறைவேற்றினேன். திரும்பிப்போ. வெகுதூரம் நடப்பதால் உனக்கு ச்ரமமுண்டாகக்கூடாது.

ஸா:—லோகங்களிலுள்ள ப்ராணிகளை தாங்கள் ஏற்படுத்தின விதிகளால் கட்டுப்படுத்தி ஆளுகிறீர்கள். அந்த விதிப்படியே அவைகளைக் கொண்டு போகிறீர்கள். ஆகையால் தங்களை யமனென்று (விதிப்படி ஆளுகிறவரென்று) சொல்லுகிறார்கள். என் விக்ஞாபனத்தையும் அங்கீகரிக்க ப்ரார்த்திக்கிறேன். ஸகல ப்ராணிகளிடத்தில் மனோவாக்குக் காயங்களால் த்ரோஹஞ்செய்யாமலிருப்பதும், கூடியவரையில் அவர்களுக்கு உபகாரஞ்செய்து அவர்கள் கேட்பதைத் தடையில்லாமல் கொடுப்பதும், ஸாதுக்கள் அநாதியாய் அனுஷ்டித்துவரும் தர்மமென்று சொல்லுகிறார்கள். ஆனல், லோகத்திலுள்ள மனுஷ்யர்கள் பெரும்பாலும் இந்தத் தர்மத்தை அனுஷ்டிப்பதற்குச் சக்தியற்றவர்கள். அவர்களை வந்து அண்டின சத்ருக்களிடத்திலும் ஸாதுக்கள் எல்லையற்ற கிருபைசெய்கிறார்கள். தாங்களோ மனுஷ்யர்களுக்கு மேலான தேவச்ரேஷ்டர். ஸாதுக்களால் பூஜிக்கப்பட்டவர்.

ய:—கடுங்கோடையில் பாலைவனத்தில் தபிக்கிறவனுக்கு மதுரமான குளிர்ந்த ஜலம் எவ்வளவு ப்ரியமாயிருக்குமோ, அப்படி நீ சொல்லும் வார்த்தைகள் எனக்குப் பரமானந்தத்தைக் கொடுக்கின்றன. ஆகையால் ஸத்யவானுடைய உயிரைத்தவிர உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்.

ஸா:—என் பிதாவான அச்வபதிமஹாராஜனு

க்கு புத்ரஸந்தானமில்லை; அவருடைய வம்சத்தை விருத்திபண்ணும்படியான நூறு புத்ரர்கள் பிறக்க வேண்டும். நான் கேட்கும் மூன்றுவது வரம் இது தான்.

ய:—ஸகல மங்களங்களுக்கும் இருப்பிடமானவளே! உன் பிதாவின் வம்சத்தை விருத்திசெய்யும் நூறு புத்ரர்கள் தேஜஸ்விகளாய் அவருக்குப் பிறப்பார்கள். உன் எண்ணங்கள் நிறைவேறினவல்லவா? இனி திருப்பிப்போ. வெகுதூரம் வந்துவிட்டாய்.

ஸா:—என் பர்த்தாவின் ஸமீபத்திலிருக்கையில் எனக்குத் தூரமென்பதே தோன்றுது. என் மனஸோ தேஹத்தைக்காட்டிலும் வெகுதூரம் ஓடுகின்றது. (என் எண்ணங்கள் இன்னும் நிறைவேறவில்லை). தாங்கள் சென்றுகொண்டே என் விக்ஞாபனத்தை மறுபடியும் அங்கீகரிக்க ப்ரார்த்திக்கிறேன். ஸகல லோகங்களுக்கும் ப்ரகாசத்தையும் ப்ராணனையும் கொடுத்து ரக்ஷிக்கும் விவஸ்வானுடைய (ஸூர்யனுடைய) ப்ரதாபசாலியான புத்ரனுகையால், வித்வான்கள் தங்களுக்கு வைவஸ்வதரென்று பெயரிட்டிருக்கிறுர்கள். சதருமித்ரனென்ற தாரதம்யமில்லாமல் தாங்கள் ஆளுகிறபடியால், ஸகல ப்ராணிகளும் தங்களுடைய ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறுர்கள். தங்களால் தர்மம் விளங்குகிறபடியால் தங்களை தர்மராஜனென்கிறுர்கள். ஸாதுக்களிடத்தில் நமக்குண்டாகும் விச்வாஸம் நமது ஆத்மாவிடத்தி

லும் உண்டாகாது; ஆகையால் ஸாதுக்களிடத்தில் எல்லோரும் ஸ்நேஹஞ்செய்ய விசேஷமாய் விரும்புகிறார்கள் நாம் ஸகல ப்ராணிகளிடத்திலும் ஸ்நேஹபாவத்தைக்கொண்டிருந்தால், அவைகளுக்கு நம்மிடத்தில் விச்வாஸமுண்டாகிறது. ஆகையால் ஸாதுக்களிடத்தில் ஜனங்களுக்கு விசேஷமாய் நம்பிக்கையுண்டாவது ஸஹஜம். லௌகிகஜனங்களை நம்புகிறவர்களுக்கே இஷ்டஸித்தியுண்டாகும்பொழுது, கேவலம் தர்மராஜாவான தங்களிடத்தில் விச்வாஸம் வைத்த என் ப்ரார்த்தனை நிறைவேறாமல் போகுமா?

ய:—கன்யாரத்னமே! இவ்விதமான வார்த்தைகளை உன்னைத்தவிர வேறொருவர் சொல்லக் கேட்டதில்லை. மஹாஸந்தோஷமடைந்தேன். உன் பர்த்தாவின் ஜீவனைத்தவிர வேறு நான்காவது வரத்தைக் கேள்.

ஸா:—எங்களுடைய வம்சத்தை விருத்திசெய்யக் கூடியவர்களாய்ப், பலத்திலும் வீர்யத்திலும் நிகரற்றவர்களாய், நூறு புத்ரர்கள் எனக்கும் ஸத்யவானுக்கும் பிறக்கவேண்டும். நான் கேட்கும் நான்காவது வரம் இதுதான்.

ய:—உன்னிஷ்டப்படியே பலசாலிகளும் வீரர்களுமான நூறு புத்ரர்கள் உனக்கும் ஸத்யவானுக்கும் பிறப்பார்கள். உனக்கு மிகவும் ச்ரமமுண்டாயிருக்கிறது. வெகுதூரம் வந்துவிட்டாய். திரும்பிப்போ.

ஸா:—தாங்கள் அனுக்ரஹித்த நூறு புத்ரர்கள் எனக்கு என் பர்த்தாவால் கிடைக்கவேண்டும். என்னைப்போன்ற பதிவ்ரதைகளுக்கு அதுதான் தர்மம். அவருடைய ப்ராணனைத் தாங்கள் அபஹரித்துவிட்டீர்கள். ஆகையால் தங்களுடைய அனுக்ரஹம் எப்படிப் பலிக்கும்? ஸாதுக்கள் ஒருவர்க்கு வரங்களைக் கொடுத்தால் அவைகளை எப்படியாவது நிறைவேற்றுவார்களேயொழிய, கொடுத்துவிட்டோமேயென்று வருந்தமாட்டார்கள். எப்படி நிறைவேற்றப்போகிறோமென்று கவலைப்படமாட்டார்கள். தங்களுடைய வார்த்தை பொய்யாகக்கூடாது. நான் தங்களைத்தர்சித்துப் பலமில்லாமல் திரும்பிப் போகவுங்கூடாது. இறந்த ஸத்யவான் பிழைத்தெழுந்தாலொழிய இவையெல்லாம் எப்படி நடக்கும்? இது அஸாத்யமல்லவாவென்றால், தங்களைப் போன்ற ஸாதுக்களுக்கு அஸாத்யமுமுண்டோ? அவர்களால் பிறர்க்கு யாதொரு பயமும் கெடுதியும் நேராது; அப்படியிருக்கத் தங்களால் எனக்கு யாதொரு கவலையும் பயமும் இல்லை. ஸாதுக்கள் ஸத்யத்தால் ஸூர்யனை நடத்திவருகிறார்கள்; ஸாதுக்கள் தபஸால் பூமியைத் தாங்கிவருகிறார்கள்; மூன்று காலங்களிலுமுள்ள ஸகலபதார்த்தங்களுக்கும் ஸாதுக்களே கதி. ஸாதுச்ரேஷ்டரான தாங்கள் ஸத்யந்தவறாமலிருக்க வேண்டியது முக்யம். தங்களைப்போன்ற ஸாதுக்களுடைய சேர்க்கையைப் பெற்ற எனக்கு வருத்த

முண்டாவது ந்யாயமோ? இந்தப் புராதன தர்மம் பெரியோர்களால் அனுஷ்டிக்கப்பட்டதென்றறிந்து, ஸாதுக்கள் ப்ரத்யுபகாரத்தை எதிர்பார்க்காமல் பிறர்க்கு உபகாரஞ்செய்கிறார்கள். தரித்ரன் ஒருவனிடத்தில் கிருபைசெய்தால் ப்ரயோஜனமென்ன? தனவான்களின் அனுக்ரஹமிருந்தால் ஏழ்மைத்தனம் நீங்கும். ஆனால் அதினால் நமக்குக் கௌரவமில்லை. ஆகையால் ஸாதுக்களுடைய அனுக்ரஹம் கிடைத்தால் நமக்கு விசேஷ கௌரதையும் ஐச்வர்யமும் ஸந்தோஷமும் ஏற்படும். துஷ்டனை ஆச்ரயித்தால் கௌரதையும் இல்லை; வறுமையும் நீங்காது. ஸாதுக்களுடைய கிருபை வீண்போகாது. அண்டினவர்களைக் காப்பாற்றுவது ஸாதுக்களின் ஸ்வபாவமாயும் தர்மமாயுமிருக்கின்றது. வீண்போகாத அனுக்ரஹமும் ஐச்வர்யமும் கௌரதையும் தங்களிடத்திலேயே குடிகொண்டிருக்கின்றன: ஆகையால் எங்களை ரக்ஷிக்கவேண்டும்.

ய:—நீ சொல்லும் வார்த்தைகள் உத்தமதர்மத்திற்கொத்து, மனவிற்கு அனுகூலமாய், ஆழ்ந்த அர்த்தங்களடங்கினதாய், மனோஹரமான பதங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைக் கேட்கக்கேட்க எனக்கு உன்னிடத்தில் உத்தமமான பக்தி உண்டாயிருக்கிறது. உன்னைப்போன்ற பதிவ்ரதையை நான் பார்த்ததில்லை. ஆகையால் இதுவரையில் கொடுத்த வரங்களைக் காட்டிலும் ச்ரேஷ்டமான வேறொரு வரத்தைக் கேள்.

ஸா:—தாங்கள் புத்ரலாபத்தை எனக்கு அனுக்ரஹித்தீர்கள். தகுந்த பர்த்தாவுடன் சேர்ந்திருந்தாலொழிய அந்த ப்ரயோஜனம் கிடைக்குமோ? மதயந்தி முதலியவர்களைப்போல் இதர புருஷர்களால் ப்ரஜைகளை அடைவதில் என் மனஸ் செல்லவில்லை. என் ப்ரார்த்தனையும் தங்களுடைய வார்த்தையும் ஸத்யமாகவேண்டியிருந்தால் என் பர்த்தாவான ஸத்யவானைப் பிழைப்பியுங்கள். நான் கேட்கும் வரம் இது தான். பர்த்தாவில்லாவிட்டால் நானும் இறந்தவளைப்போலல்லவா? அவரில்லாவிட்டால் இந்த வரங்களை நான் எப்படி அனுபவிக்கமுடியும்? என் பதியுடன் அனுபவிக்காத ஸுகம் வேண்டாம். என் பதியுடன் அனுபவிக்காத ஸ்வர்க்காதிலோகங்களும் வேண்டாம். என் பதியுடன் அனுபவிக்காத ஐச்வர்யமும் வேண்டாம். என் பதி இறந்தபிறகு நான் உயிர்வைத்துக்கொள்ளவும் வேண்டாம். எனக்கு நூறு புத்ரர்கள் பிறப்பார்களென்று தாங்களே வரங்கொடுத்திருக்கிறீர்கள். அதற்குக் காரணமான என் பர்த்தாவின் உயிரைத் தாங்களே அபஹரித்துக் கொண்டுபோகிறீர்கள். ஆகையால் ஸத்யவான் மறுபடியும் பிழைக்கட்டும். நான் கேட்கும் வரம் இதுதான். தங்களுடைய வார்த்தையும் ஸத்யமாகுமெ" ன்றாள்.

"அப்படியே செய்கிறேனெ" ன்று, யமன் பாசத்தை அவிழ்த்து, மிகுந்த ஸந்தோஷத்துடன், "பெண்ணே! இதோ உன் பர்த்தாவின் ஜீவனைவிட்டுவிட்டேன்.

தர்மார்த்தமென்ற புருஷார்த்தங்களுக்கு அனுகுண மான உன் வார்த்தைகளால் மிகவும் ஸந்தோஷமடை ந்தேன். குலத்திற்குத் திலகம்போன்றவளே! மஹா பதிவ்ரதையே! ஸத்யவான் யாதொரு அஸௌக்யமு மில்லாமல் முன்போல் பிழைத்துவிட்டான். நீ அவ னை அழைத்துக்கொண்டு போகலாம். அவன் ஸகல மனோரதங்களையும் அடைந்து உன்னுடன் நானூறு வர்ஷங்கள் வரையில் ஆனந்தமாய் வஸிப்பான். யாக யக்ஞங்களை விதிப்படி செய்து, ப்ரஜைகளைத் தர்ம மாய்ப் பாலித்து, பூமியில் விசேஷ கீர்த்தியை அடை வான். உங்களுக்கு நூறு புத்ரர்கள் பிறப்பார்கள். ஸாவித்ரர்களென்று உன் பெயர்கொண்டவர்களாய் என்றுமழியாத கீர்த்தியடைவார்கள். உன் பெற் றோர்களுக்கு நூறு புத்ரர்கள் பிறப்பார்கள். அவர் களுக்கும் எண்ணிறந்த புத்ரபௌத்ரர்கள் உண்டா வார்கள். உன் ஸஹோதரர்கள் க்ஷத்ரியச்ரேஷ்டர்க ளாய்த் தேவர்களைப்போல் விளங்குவார்க" ளென்று அமோஹமான வரங்களைக்கொடுத்துத், தர்மராஜன் ஸாவித்ரீயைத் திருப்பியனுப்பித் தன்னுலகஞ்சென் றான்.

அந்தப் பதிவ்ரதை யமனிடத்திலிருந்து தன் பர்த்தாவை மீட்டு, அவருடைய தேஹம்கிடக்குமிட த்திற்குத் திரும்பிவந்தாள். அவருடைய தலையைத் தன் மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள். உடனே ஸத்யவான் தூங்கியெழுந்தவனைப்போல்

ப்ரக்ஞைதெளிந்து தேசாந்தரம் போய் வந்தவனைப் போல் மஹாப்ரேமையுடன் அவளை அடிக்கடி பார்த்து, "ஸாவித்ரீ! நான் நெடுநேரம் தூங்கிவிட்டேன். என்னை எழுப்பக்கூடாதா? என்னைக் கட்டி இழுத்துக்கொண்டிருந்த கறுத்த புருஷன் எங்கே போய் விட்டா"னென்றான். ஸாவித்ரீ, "ராஜச்ரேஷ்ட! என் மடியில் தலைவை வைத்துக்கொண்டு தாங்கள் வெகுகாலம் தூங்கிவிட்டீர்கள். ப்ராணிகளின் தர்மாதர்மங்களுக்கு அதிபதியான வைவஸ்தமஹாராஜன் போய்விட்டார். தங்களுக்கு ச்ரமந்தீர்ந்ததா? தூக்கந்தெளிந்ததா? மஹாபாக்யவானே! முடியுமானால் எழுந்திருங்கள். அஸ்தமித்து வெகுநேரமாயிற்றல்லவா" வென்றாள்.

ஸத்யவான் நன்றாய் ப்ரக்ஞை தெளிந்து ஸுகமாய்த் தூங்கியெழுந்தவனைப்போல், திக்குகளையும் வனங்களையும் நான்குபுறத்திலும் பார்த்துப், "பெண்ணே! பழங்களைப் பறிப்பதற்காக உன்னுடன் இங்கே வந்தேன். கட்டைகளைப் பிளந்துகொண்டிருக்கும்பொழுது எனக்குத் தலைவலி உண்டாயிற்று. அதைத் தாங்கமுடியாமல் உன் மடியில் படுத்துத் தூங்கினேன். அது நன்றாய் ஞாபகமிருக்கிறது. நீ என்னைக் கட்டியணைத்துக்கொண்டிருக்கும்பொழுது வரவர நித்ரை அதிகரித்தது. அப்பொழுது ஒரு பயங்கரமான இருட்டையும், ஓர் மஹாதேஜஸ்வியான புருஷனையும் கண்டேன். அது

இன்னதென்று உனக்குத் தெரியுமா? ஸ்வப்னமா? அல்லது நிஜமாவெ" ன்றான். ஸாவித்ரீ "இப்பொழுது அஸ்தமித்து வெகுநேரமாயிற்று, ஸகல விருத்தாந்தத்தையும் நாளைக்குச் சொல்லுகிறேன். எழுந்திருங்கள், எழுந்திருங்கள். தங்களுக்கு ஸகல மங்களங்களுமுண்டாகட்டும். மாதாபிதாக்களைப் பார்க்கவேண்டாமா? இவ்வளவு நேரமாயும் வரவில்லையேயென்று பயந்து வருந்தி வழிபார்த்துக்கொண்டிருப்பார்களே. ஸூர்யன் மறைந்துவிட்டார். எங்கும் ஒரே இருட்டாயிருக்கிறது. ராக்ஷஸர்கள் பயங்கரமான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு ஸந்தோஷமுள்ளவர்களாய் ஸஞ்சரிக்கிறார்கள். காட்டில் மிருகங்கள் ஸஞ்சரிப்பதால் பூமியில் விழுந்திருக்கும் சருகுகள் சலசலவென்றோசைப்படுகின்றன. அதோ பாருங்கள்; நரிகள் தென்மேற்கிலிருந்து கோரமாயும் பயங்கரமாயும் ஊளையிடுகின்றன. என் மனஸ் பயத்தால் நடுங்குகிறது.

ஸத்யவான்:—இந்த வனம் ஸ்வபாவமாய்ப் பயங்கரமானது. இப்பொழுது இருள் அடர்ந்திருக்கிறது. உனக்கு வழிதெரியாதே! எப்படித் திரும்பிப் போவோம்?

ஸா:—காட்டுத்தீயால் வெந்த இந்த வனத்தில் அதோ ஒரு பட்ட மரம் எரிந்துகொண்டிருக்கிறது. அந்த வழியாய்க் காற்றடிக்கும்பொழுது நெருப்புஜ்வாலைகள் அடிக்கடி காணப்படுகின்றன. அங்கிரு

ந்து ஒரு எரியும் கட்டையை எடுத்துக் கொண்டு வந்து இங்கே நாலுபக்கங்களிலும் கொளுத்திவிடுகிறேன். தாங்கள் வெட்டிப்போட்ட கட்டைகள் இதோ கிடக்கின்றன; கவலைப்படவேண்டாம். தங்களுக்கு இன்னும் ச்ரமம் நீங்கவில்லையென்றெண்ணுகிறேன். இப்பொழுது நடந்துபோகமுடியாவிட்டால், இருள் சூழ்ந்த இந்தக் காட்டில் வழிதெரியாவிட்டால், நாளைக்காலையில் ப்ரகாசமானபிறகு இங்கிருந்து புறப்பட்டுப் போவோம். தங்களுக்கிஷ்டமானால் இன்றிராத்ரி இங்கே வஸிப்போம்.

ஸ:—எனக்குத் தலைவலி நீங்கிற்று; தேஹத்தில் அஸௌக்யமில்லை; மாதாபிதாக்களைப் பார்க்க விரும்புகிறேன். நீ என்னை எப்படியாவது அழைத்துக் கொண்டு போகவேண்டும் இதுவரையில் ஆச்ரமத்திலிருந்து இப்படி அகாலத்தில் வெளியில் போயிருந்ததில்லை. அஸ்தமிப்பதற்கு முந்தியே நான் வெளியில் போகக்கூடாதென்று என் மாதா நிறுத்திவிடுவாள். பகலில் நான் வெளியில் போனாலும் அவர்கள் நான் திரும்பிவரும்வரையில் வருத்தப்பட்டுக்கொண்டிருப்பார்கள். என் பிதாவும் ஆச்ரமங்களில் வஸிப்பவர்களும் என்னைப் பலவிடங்களிலும் தேடிக்கொண்டிருப்பார்கள். இதற்குமுன் பலதடவைகளில் அவர்கள் மிகவும் வருத்தமடைந்து, நீ வெளியில் போனால் வெகுநேரங்கழித்து வருகிறுயெ' ன்று என்னைக் கண்டித்திருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் என்னைக்

காணுமல் என்ன பாடுபடுகிருர்களோ? அவர்கள் என்னிடத்தில்வைத்த விசேஷப்ரீதியால் முன்பு ஒருஸமயத்தில் ராத்ரியில் என்னைப் பார்த்துக் கண்ணீர்விட்டழுது, "குழந்தாய்! உன்னை விட்டு ஒரு முஹூர்த்தமாவது நாங்கள் பிழைத்திருப்போமா? நீ இருக்கும்வரையில் மாத்ரம் எங்களுடைய உயிர் தரிக்கும். நாங்கள் மிகவும் வயஸ்சென்றவர்கள்; கண்தெரியாதவர்கள்; நீயே எங்களுக்குக் கண். எங்களுடைய வம்சம் உன்னால் விருத்தியடையவேண்டியது; எங்களுக்குப் பிண்டம்போட்டு உத்தரக்ரியைகளைச் செய்து உத்தமகதியைக் கொடுக்கவேண்டியதும் நீயே; எங்களுடைய குலத்தையும் கீர்த்தியையும் நீடித்திருக்கச் செய்கிறவனும் நீயே" யென்று சொல்லியிருக்கிருர்கள். என் மாதாவோ வயஸ்சென்றவள்; பிதாவோ இன்னும் வயஸ் சென்றவர்; அவர்களுக்கு நானே ஊன்றுகோலல்லவா? ராத்ரியான்பிறகும் என்னைக் காணுமல் என்ன பாடுபடுகிருர்களோ? என் பிதாவும், ஒருவர்க்கும் அபராதஞ்செய்தறியாத என் மாதாவும் என்னைப்பற்றி ஸந்தேஹப்பட்டு மனங்கலங்குவதற்குக் காரணமான இந்தப் பாழுந்தூக்கம் எங்கிருந்து வந்ததோ? என் பெற்ருேர்களை விட்டு நான் உயிர்வைத்துக்கொள்ளமாட்டேன்? ஆகையால் நான் பிழைப்பதே அரிது. ஸ்தூல திருஷ்டியை இழந்து ஞானதிருஷ்டியைப் பெற்ற என் பிதா மனங்கலங்கி, ஆச்ரமங்களில் வஸிக்கும் ஒவ்

வொருவரையும் என்னைப்பற்றி விசாரித்துக் கொண்டிருப்பார். என்னைப்பற்றி எனக்குக் கொஞ் சங்கூட விசாரமில்லை; பெற்றோர்களைப்பற்றியே வரு த்தப்படுகிறேன். மஹாபதிவ்ரதையான என் மாதா படும் துக்கத்தை நினைக்க நினைக்க எனக்கும் சொல்ல முடியாத துக்கமுண்டாகிறது. இன்று என் விஷய மாய் அவர்கள் விசேஷ ஸந்தாபத்தையடையாமலிரு க்கவேண்டுமே. அவர்கள் உயிருடனிருக்கும்வரை யில் நானும் பிழைத்திருப்பேன். அவர்களை ரக்ஷிக் கவேண்டியது என் கடமையல்லவா? அவர்களே என க்குப் பரதைவம். அவர்களே எனக்குப் பூஜிக்கத் தகுந்தவர்களென்ற இந்த விஷயத்தையே எப்பொழு தும் ச்ரேஷ்டமான வ்ரதமாய்க்கொண்டிருக்கிறே னெ"ன்றான். பெற்றோர்களிடத்தில் விசேஷ ப்ரீதியை யும் பக்தியையும் வைத்திருந்த அந்தத் தர்மாத்மா, கைகளைத் தூக்கிக்கொண்டு துக்கந்தாங்காமல் வாய் விட்டலறினான். அதைக்கண்டு ஸாவித்ரீயென்ற மஹாபதிவ்ரதை அவனுடைய கண்ணீரைக் கைகளா ல் துடைத்து, "நான் செய்த தபஸாலும் கொடுத்த தானத்தாலும் செய்த ஹோமத்தாலும், என் பர்த்தா விற்கும் மாமனாருக்கும் மாமியாருக்கும் இன்றிராத்ரி யாதொரு துக்கமும் அஸௌகர்யமும் நேராமல் ஸகல மங்களங்களுமுண்டாகச்கடவது. இதுவரை யில் விளையாட்டிற்காவது அஜாக்ரதையாகவாவது என்னிஷ்டப்படி பேசுங்காலத்திலாவது பொய்

சொல்லி அறியேன். அந்த ஸத்யத்தின் மஹிமை யால் என் மாமனாரும் மாமியாரும் இன்று பிழைத்தி ருக்கவேண்டு" மென்றாள். அப்பொழுது ஸத்ய வான் "எப்படியாவது நான் என் மாதாபிதாக்களைப் பார்க்கவேண்டும். ஸாவித்ரீ! போவோம் வா. ஏன் தாமஸஞ்செய்கிறாய்? அவர்களை உயிருடன் பார் பேனா? அவர்களுக்கு எதாவது ஆபத் நேர்ந்திருந் தால் நான் உயிர்வைத்துக்கொள்ளமாட்டேன். ஸத்யதேவதையின்மேல் ஆணையிட்டுச் சொல்லுகி றேன். உனக்குத் தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டு மென்று நோக்கமிருந்தால், நான் பிழைத்திருக்க நீ விரும்பினால், நமது ஆச்ரமத்திற்குப் போவோம் வா" வென்றான்.

உடனே ஸாவித்ரீ எழுந்திருந்து தலைமயிரை மு டிந்துகொண்டு, ஸத்யவானுடைய கைகளைப் பிடித் துத் தூக்கிவிட்டாள். அவன் எழுந்திருந்து கைக ளால் அவயவங்களைத் துடைத்துக்கொண்டு, நான்கு புறத்திலும் பார்க்கையில், கூடை கண்ணில் பட்டது. அதைக் கண்டு ஸாவித்ரீ "இந்தப் பழங்களை நாளைக் குக் கொண்டுபோகலாம். வீட்டுக்கார்யங்களுக் காக இந்தக் கோடாலியைமாத்ரம் நான் எடுத்துக் கொண்டுவருகிறே" னென்று, கூடையை மரத்தின் கிளையில் தொங்கவிட்டுக், கோடாலியைத் தோளில் மாட்டிக்கொண்டு, ஸத்யவானுடைய புஜத்தை மற் றொரு தோளில் தாங்கி, அவனைப் பிடித்துக்கொண்டு

மெள்ளமெள்ளச் சென்றாள். அப்பொழுது ஸத்யவான் "நான் அடிக்கடி இங்கே வந்திருப்பதாலும் விருக்ஷங்களுக்கு நடுவில் தெரியும் நிலவாலும் வழி தெரிகிறது. நாம் பழங்களைப் பறிப்பதற்காக வந்த மார்க்கத்தில் சேர்ந்துவிட்டோம்; இனி யோசிக்காமல் வந்த வழியே செல். இந்தப் பலாசமரத்தின் ஸமீபத்தில் வழி இரண்டு பாதைகளாய்ப் பிரிகின்றன. வடக்குப் பாதையின் வழியாய்ப் போவோம்; வேகமாய் நட. எனக்குத் தேஹத்தில் யாதொரு அஸௌக்யமில்லை. பூர்வபலம் வந்துவிட்ட" தென்று, பெற்றோர்களைப் பார்க்க ஆவல்கொண்டு, அதிவேகமாய் ஆச்ரமத்தைநோக்கிச் சென்றான்.

## அத்யாயம்-299

### ஸாவித்ரீ நடந்த விருத்தாந்தத்தைத் தெரிவித்தது

இதற்குள் த்யுமத்ஸேனனுக்கு முன்போல் கண் தெரிந்தது. நான்கு புறங்களிலும் நன்றாய்ப் பார்த்தார். சுற்றிலுமிருந்த ஸகல ஆச்ரமங்களிலும், தானும் பார்யையும் ஸத்யவானையும் ஸாவித்ரீயையும் தேடியும், அவர்களைக்காணாமல் மிகுந்த வருத்தமடைந்தான். அன்று ராத்ரியில் ஆச்ரமங்களிலும் ஆற்றோரங்களிலும் வனங்களிலும் ஏரிகளிலும் குளக்கரைகளிலும் அவ்விருவரும் தேடிக்கொண்டேயிருந்தார்கள். ஏதாவது சப்தத்தைக் கேட்டால் தங்களுடைய புத்ரன் வருகிறானென்று சற்றுநேரம் உற்றுக்கேட்டு, 'அதோ ஸாவித்ரீயுடன் ஸத்யவான் வருகிறா'னென்று ஆவலுடன் சொல்லிக்கொண்டார்கள். கால்களில் முள்ளுகள் பாய்ந்து, கூர்மையான கல்லுகள் குத்திக் காயம்பட்டு ரக்தம் பெருகியோடத், தேஹமெங்கும் முள்ளுகளாலும் தர்ப்பைகளாலும் கீறப்பட்டுப், பித்துப்பிடித்ததுபோல் மூலைக்குமூலை ஓடினார்கள். அப்பொழுது ஆச்ரமங்களில் வஸிக்கும் ப்ராஹ்மணர்கள் அவர்களைச் சூழ்ந்து மறித்து, ஸமாதானஞ்செய்து, அவர்களுடைய ஆச்ரமத்திற்கு அழைத்துவந்தார்கள். அந்த வயஸ்சென்ற தபஸ்வி

கள் பூர்வகாலத்தரசர்களுடைய கதைகளைச் சொல்லி எவ்வளவு ஆறுதல் செய்தும், அவ்விருவரும் புத்ரனைப் பார்ப்பதிலேயே நோக்கமுள்ளவர்களாய், அவனுடைய பாலலீலைகளையும் ஸாவித்ரீயைக் கண்டதையும் விவாஹஞ்செய்ததையும் அடிக்கடி நினைத்து நினைத்து அடங்காத்துயரமடைந்தார்கள். "ஹா புத்ர! ஹா ஸாவித்ரீ! பதிவ்ரதாசிரோமணி! எங்கே போனீர்களோ; என்ன செய்கிறீர்களோ" வென்று, கேட்பவர்களுடைய மனஸுருகும்படி வாய்விட்டழுதார்கள்.

அப்பொழுது அந்தத் தபஸ்விகளுக்குள் ஸத்யஸந்தரான ஸுவர்ச்சஸ், "என் வீணையத் துக்கப்படுகிறீர்கள்? ஸாவித்ரீயின் தபஸாலும் அடக்கத்தாலும் ஆசாரத்தாலும் ஸத்யவான் யாதொரு கெடுதியுமில்லாமல் ஸௌக்யமாயிருப்பா" னென்றார்.

கௌதமர்:—"வேதவேதாங்கங்களைப் பூர்ணமாய் அத்யயனஞ்செய்திருக்கிறேன். விசேஷமான தபஸைச் செய்து அளவற்ற மஹிமையை அடைந்திருக்கிறேன். பால்யம்முதல் ப்ரஹ்மசர்யவ்ரதத்தை அனுஷ்டித்துவருகிறேன். பெரியோர்களையும் அக்னிகளையும் பூஜித்துத் திருப்திசெய்திருக்கிறேன். ஸகல வ்ரதங்களையும் ஜாக்ரதையாய்ச் செய்திருக்கிறேன். விதிப்படி காற்றைப் புஜித்தும் உபவாஸஞ்செய்துமிருக்கிறேன். இவ்விமான தபோமஹிமையால் ஸகல விஷயங்களையும் அறியும் சக்தி எனக்குண்டு.

நான் சொல்வதை ஸத்யமாயெண்ணுங்கள். உங்களுடைய புத்ரனன ஸத்யவான் உயிரோடிருக்கிருனெ"ன்ருர்.

அவருடைய சிஷ்யன்:—"என் குருவின் வாக்கிலிருந்து வரும் வார்த்தை இதுவரையில் பொய்யானதில்லை. ஆகையால் ஸத்யவான் உயிரோடிருக்கிரு"னென்ருர்.

ரிஷிகள்:—"தீர்க்கஸுமங்கலிக்குரிய ஸகல சுபலக்ஷணங்களும் பொருந்தியிருக்கும் ஸாவித்ரீயைப் பார்யையாயடைந்த ஸத்யவான் பிழைத்திருக்கிருனென்பதில் ஸந்தேஹமென்ன" வென்ருர்கள்.

பரத்வாஜர்:—"தபஸிலும் அடக்கத்திலும் ஆசாரத்திலும் நிகரற்ற ஸாவித்ரீயைப் பார்யையாகப் பெற்றிருப்பதால் ஸத்யவான் பிழைத்திருக்கிரு"னென்ருர்.

தால்ப்யர்:—"உமக்கு அகஸ்மாத்தாய்க் கண் தெரிந்தபடியாலும், ஸாவித்ரீ ச்ரேஷ்டமான வ்ரதத்தை அனுஷ்டித்து ஆஹாரஞ்செய்யாமல் போயிருப்பதாலும், ஸத்யவான் பிழைத்திருக்கிருனென்பது நிச்சய"மென்ருர்.

ஆபஸ்தம்பர்:—"சாந்தமான இந்தத் திக்கிலிருந்து மிருகங்களும் பக்ஷிகளும் உமக்கு ராஜ்யலக்ஷ்மி விருத்தியாகுமென்று சொல்லுகிறபடியால், ஸத்யவான் உயிரோடிருக்கிரு"னென்ருர்.

தௌம்யர்:—"உமது புத்ரன் ஸமஸ்த நற்குணங்

களால் அலங்கரிக்கப்பட்டவன்; ஸகல ஜனங்களுக்கும் ப்ரியமானவன்; தீர்க்காயுளை அடையும் லக்ஷணங்கள் பொருந்தியிருக்கிறுன். ஆகையால் அவன் பிழைத்திருக்கிறுனென்பது நிச்சய"மென்றுர்.

இப்படி ஸத்யவான்களான அந்தத் தபஸ்விகள் ஆறுதல் சொல்ல, அவ்விருவரும் அந்தந்த விஷயங்களை நன்றுய் யோசித்துக் கவலையற்றவர்களைப்போலிருந்தார்கள். சற்றுநேரத்திற்கெல்லாம் ஸத்யவானை அழைத்துக்கொண்டு ஸாவித்ரீ, ஸந்தோஷத்தால் மலர்ந்த முகத்துடன் ஆச்ரமத்தில் ப்ரவேசித்தாள். எல்லோரும் பரபரப்புடன் தாவி எழுந்து அளவற்ற ஆனந்தமடைந்தார்கள். மாதாபிதாக்கள் ஸத்யவானுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு வாய்விட்டழுதார்கள். அப்பொழுது அங்கிருந்த ப்ராஹ்மணர்கள், "மஹாராஜ! தங்களுடைய புத்ரன் வந்து சேர்ந்தான்; தங்களுக்குக் கண்கள் முன்போலாயின; ஆகையால் நாங்களெல்லோரும் தங்களுடைய க்ஷேமவிருத்தியைப்பற்றி ஸந்தோஷத்தோடு விசாரிக்கிறேம். தங்களுடைய புத்ரனை மறுபடியும் அடைந்ததாலும், ஸாவித்ரீயைப்பார்த்ததாலும், கண்கள் மறுபடியும் தெரிந்ததாலும், தங்களுக்கு இனி வர வர க்ஷேமகாலமென்று நினைக்கிறேம். நாங்கள் சொன்னபடியே நடக்கும்; ஸந்தேஹப்படவேண்டாம், மென்மேலும் க்ஷேமமும் மங்களங்களும் சீக்ரமாய்க் கிடைக்கு"மென்றுர்கள். பிறகு அந்தப்ராஹ்மணர்

கள் அக்னியை வளர்த்து த்யுத்ஸேனனுக்கு ஸமீபத்தில் உட்கார்ந்தார்கள். ஸத்யவானும் அவனுடைய மாதாவும் ஸாவித்ரீயும் ஒருபுறமாய் நின்றுகொண்டிருந்தார்கள்; எல்லோரும் அநுமதிகொடுத்தபிறகு உட்கார்ந்தார்கள். அப்பொழுது அந்த வனவாஸிகள், "ராஜபுத்ர! நீயும் ஸாவித்ரீயும் இதற்கு முன்பே ஆச்ரமத்திற்கு வந்திருக்கலாமே. இந்த ராத்ரியில் இவ்வளவு நேரமானதற்குக் காரணமென்ன? உங்களுக்கு என்ன இடையூறு நேர்ந்தது? உன் பெற்றோர்களும் நாங்களும் உங்களைக் காணமல் எல்லையற்ற துக்கப்பட்டுக்கொண்டிருந்தோம். நீங்கள் இதுவரையில் வராததற்குக் காரணம் தெரியவில்லை. நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லவேண்டு"மென்று கேட்டார்கள்.

ஸத்யவான்:—என் பிதாவின் அநுமதிபெற்று ஸாவித்ரீயுடன் வனத்திற்குச் சென்றேன். அங்கே கட்டை பிளந்துகொண்டிருக்கையில், எனக்குத் தலைவலியுண்டாயிற்று. அதைப் பொறுக்கமுடியாமல் வெகுநேரம் தூங்கிவிட்டதாய்த் தோன்றுகிறது. இதுவரையில் அவ்வளவு நேரம் தூங்கினதில்லை. நீங்களெல்லோரும் என்னைக் காணமல் வருத்தப்படுவீர்களென்று, ராத்ரி எவ்வளவு நேரமானாலும் வந்து சேர்ந்தேன். இதைத்தவிர வேறு காரணமில்லை.

கௌதமர்:—உன் பிதாவான த்யுமத்ஸேனனுக்கு அகஸ்மாத்தாய்க் கண் தெரிந்தது. அதின் காரணம்

உனக்குத் தெரியாது. ஸாவித்ரீ சொல்லக்கூடுமென் றெண்ணுகிறேன். குழந்தாய்! ஸாவித்ரீ! அதைக் கேட்க விரும்புகிறேன். ஸுகதுக்கங்களின் ரஹஸ்யத்தையும் நன்மை தீமைகளின் உண்மையையும் அறியும் சக்தி உனக்குண்டு. உன் தேஜஸைப் பார்த்தால் ஸாக்ஷாத் ஸாவித்ரீதேவதையென்றே உன்னைச் சொல்லவேண்டும். இதற்குக் காரணம் உனக்கு நன்ருய்த்தெரியும். நிஜத்தைச்சொல். சொல்லக்கூடாத ரஹஸ்யமாயிராவிட்டால் எங்களுக்கு இதைத் தெரிவிப்பாய்.

ஸா:—நீங்கள் நினைக்கிறபடியேயல்லாது வேறல்ல. இதில் ரஹஸ்யம் யாதொன்றுமில்லை. நடந்ததைச் சொல்லுகிறேன்; கேளுங்கள். என் பர்த்தாவிற்கு இன்றுடன் ஆயுஸ் முடியுமென்று நாரதர் முன்னமே எனக்குச் சொல்லியிருக்கிருர். ஆகையால் இன்று நான் அவரைவிட்டுப் பிரியவில்லை. இவர் தூங்கிக்கொண்டிருக்கையில் யமனே தன் கிங்கரர்களுடன் வந்து, இவருடைய தேஹத்திலிருந்து ஜீவனை வெளியில் இழுத்துப், பாசத்தால் கட்டித், தன் உலகத்திற்குக்கொண்டுபோனர். நான் ஸத்யமான வார்த்தைகளால் அந்தத் தேவச்ரேஷ்டரை ஸ்தோத்ரஞ்செய்தேன். மஹாவைபவமுள்ள அந்த வைவஸ்வதமஹாராஜன் எனக்கு ஐந்து வரங்களைக் கொடுத்தார். என் மாமனுருக்கு நேத்ரங்கள் முன்போலாகவேண்டுமென்றும், இழந்தராஜ்யம் கிடைக்கவேண்டுமென்றும், என்

பிதாவிற்கு நூறு புத்ரர்களும் எனக்கு நூறு புத்ரர்களும் உண்டாகவேண்டுமென்றும், என் பர்த்தா நானூறு வருஷங்கள் வரையில் ஜீவித்திருக்கவேண்டுமென்றும், அவர் அனுக்ரஹித்தார். என் பர்த்தா தீர்க்காயுஸுடனிருக்கவேண்டுமென்றே இந்த வ்ரதத்தை அனுஷ்டித்துவந்தேன். தாங்கள் கேட்டபடி காரணத்தை விஸ்தாரமாய்ச் சொன்னேன். எனக்கு இது துக்கத்தில் ஆரம்பித்துப், பரமஸுகமாய் முடிந்தது.

ரிஷிகள்:—"த்யுமத்ஸேனனுடைய குலம் கஷ்டங்களால் பீடிக்கப்பட்டு, இருட்டாகிற மடுவில் முழுகும் ஸமயததில், குலத்திலும் சீலத்திலும் வ்ரதத்திலும் புண்யத்திலும் நிகரற்ற நீ, உன் பதிவ்ரதா மாஹாத்ப்யத்தால் அதைக் கைகொடுத்துக் கரையேற்றினை"யென்றார்கள். அந்த ரிஷிகள் இப்படி ஸாவித்ரீயென்ற ஸ்த்ரீரத்னத்தைக் கொண்டாடி உபசரித்து, த்யுமத்ஸேனனிடத்திலும் ஸத்யவானிடத்திலும் சொல்லிக்கொண்டு, தஙகளிருப்பிடங்களுக்கு க்ஷேமமாய்ப் போய்ச்சேர்ந்தார்கள்

## அத்யாயம்-300

### பதிவ்ரதாமாஹாத்ம்யம்.

மறுநாட்காலையில் எல்லா தபஸ்விகளும் நித்யகர்மங்களை முடித்துவிட்டு, த்யுமத்ஸேனனுடைய ஆச்ரமத்தில் கூடி, ஸாவித்ரீயின் மஹாபாக்யத்தை அடிக்கடி எவ்வளவு எடுத்துச் சொல்லியும் திருப்தியடையவில்லை. அப்பொழுது ஸால்வதேசத்திலிருந்து மந்த்ரிப்ரதானிகள் அங்கே வந்து த்யுமத்ஸேனனை நமஸ்கரித்து, "ப்ரபோ! தங்களுடைய சத்ருவைப் பந்துக்களோடும் மித்ரர்களோடும், அவனுடைய முக்யமந்த்ரியே கொன்றுவிட்டான். உடனே அவனுடைய ஸைன்யம் மூலைக்கு மூலை ஓடிவிட்டது. ஸகலப்ரஜைகளும் ஒரே மனஸாய்த் தாங்களே அரசனாயிருக்கவேண்டுமென்று முடிவுசெய்தார்கள். தங்களுக்கு நேத்ரங்கள் ஸௌக்யமாயிருந்தாலும் இல்லாவிட்டாலும், தங்களைத்தவிர வேறொருவரை அரசனாகக் கொள்வதில்லையென்ற நிச்சயத்துடன் இங்கே புறப்பட்டுவந்தோம். இதோ தங்களுடைய சதுரங்கபலமும் வாஹனங்களும் வந்திருக்கின்றன; வரவேண்டும். ராஜதானியில் தங்களுடைய ஜயகோஷம் விளங்குகிறது. தலைமுறை தலைமுறையாய்த் தங்களுடைய வம்சத்தார் ஆண்டுவரும் இந்த ராஜ்யத்தை வெகு

காலம் தாங்களே பரிபாலிக்கவேண்டு'' மென்றுப்ராத்தித்தார்கள். த்யுமத்ஸேனனுக்கு நேத்ரங்கள் முன்போல் ஸௌக்யமானதையும் தேஜஸும் காந்தியும் பலமும் விருத்தியானதையும் கண்டு, ஆச்சர்யத்தால் கண்கள் மலர்ந்து, அவருடைய பாதங்களில் நமஸ்கரித்தார்கள். த்யுமத்ஸேனன் அந்தப் புண்யாச்ரமங்களில் வஸிக்கும் வயஸ் சென்ற ப்ராஹ்மணர்களை நமஸ்கரித்து அவர்களால் உபசரிக்கப்பட்டு, எல்லோருடன் ராஜதானிக்குச் சென்றார். அவருடைய பத்னியும் ஸாவித்ரீயும் உத்தமமான பல்லக்கில் ஸேனைகள் புடைசூழ அவர்களுடன் சென்றார்கள். ப்ரஜைகள் புரோஹிதர்களை முன்னிட்டுக்கொண்டு த்யுமத்ஸேனனைத் தங்களுக்கரசனாயும் ஸத்யவானை யுவராஜாவாயும் பட்டாபிஷேகஞ்செய்தார்கள். காலக்ரமத்தில் ஸாவித்ரீக்கு நூறு புத்ரர்கள் பிறந்து, சூரர்களென்றும் குணவான்களென்றும் விசேஷ கீர்த்தியடைந்தார்கள். அப்படியே அவளுடைய பிதாவான அச்வபதிக்கும் மாளவிக்கும் நூறு புத்ரர்கள் பிறந்தார்கள். இப்படித்தான் பிதா மாதா மாமனார் மாமியார் பர்த்தா முதலியவர்களுடைய குலங்கள் ஸாவித்ரீயால் மேன்மையடைந்தன.

தர்மபுத்ர! அப்படியே இந்த த்ரௌபதியும் ஸகல மங்களங்களுக்கும் வாஸஸ்தானமானவள்; ஸாதுக்களுக்கு ப்ரியமான நடத்தையுடையவள்;

ஸர்வோத்தமமான குலத்தில் பிறந்தவள்; ஸாவித்ரீயைப்போல் உங்களெல்லோரையும் துக்கத்திலிருந்து கரையேற்றுவா" ளென்று, மார்க்கண்டேயமஹர்ஷி யுதிஷ்டிரருக்கு ஸாவித்ரீசரித்ரமென்ற பதிவ்ரதாமாஹாத்ம்யத்தை விஸ்தாரமாய்ச் சொன்னார். அந்தப் பாண்டவச்ரேஷ்டர் அதைக் கேட்டுச், சோகந்தீர்ந்து கவலையற்றுக், காம்யகவனத்தில் வஸித்துக் கொண்டிருந்தார்.

ஸாவித்ரீசரித்ரமென்ற இந்தப் புண்யகதையைப் பக்தியுடன் கேட்பவன் ஸகல ஸுகங்களை அடைவான்; ஸகல கோறிக்கைகளும் அவனுக்குக் கைகூடும். துக்கத்தை அடையவேமாட்டான்.

சுபமஸ்து.

3 ஆரம்பமுதல் சுமார் 800 பேர்கள் சந்தா தாரர்களாக சேர்ந்து, மாஸாந்தர ஸஞ்சிகை 1க்கு ரூ. 1-4-0 வீதம் செலுத்தி, க்ரந்தம் முழுவதையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

1-வது வால்யூம் { பாலகாண்டம்.<br>அயோத்யாகாண்டம்.

2-வது ஷை { ஆரண்யகாண்டம்.<br>கிஷ்கிந்தாகாண்டம்.<br>ஸுந்தரகாண்டம்.

3-வது ஷை { யுத்தகாண்டம்.<br>உத்தரகாண்டம்.

4-வது ஷை { ராமாயணதத்வார்த்தம்.<br>ஏழுகாண்டங்களின் நோட்டு [கள்.

தனிவால்யூம்கள் கிடைக்காது.

# ஸாவித்ரீசரித்ரம்.
## (பதிவ்ரதாமாஹாத்ம்யம்).

ஸ்ரீமன் மஹாபாரதத்திலிருந்து, மொழிபெயர்க்கப்பட்டது.

விலை அணா-4.

A 6)

## அச்சிலிருக்கும் க்ரந்தங்கள்.

| | |
|---|---|
| நளசரித்ரம், | யக்ஷப்ரச்னம், |
| விதுரநீதி, | அஜகரஉபாக்யானம், |
| ஸனத்ஸுஜாதீயம், | அனுகீதை முதலிய |

நெ. 27 ரெட்டைமால் தெரு, திருச்சினப்பள்ளி. — G. ஸ்ரீநிவாஸராகவய்யங்க